தமிழ்மொழிப் பாடத்திட்டம் **2008**
தொடக்கநிலை

# TAMIL LANGUAGE
# 2008 SYLLABUS
## PRIMARY

Implementation starting from
2008 Primary One cohort



Ministry of Education
SINGAPORE

© 2007 Curriculum Planning and Development Division.
This publication is not for sale. Permission is granted to reproduce this publication in its entirety for personal or non-commercial educational use only. All rights reserved.

# கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள்

**தொடக்கப்பள்ளிக் கல்வியை முடிக்கும் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படுவன :**

- எது சரி, எது தவறு என்று வேறுபடுத்தி அறிதல்
- பகிர்ந்துகொள்ளும் பழக்கத்தையும் மற்றவர் நலனை முன்னிலைப்படுத்தும் எண்ணத்தையும் உடையவராக இருத்தல்
- மற்றவர்களுடன் தோழமை உணர்வோடு நடந்துகொள்ளுதல்
- எதனையும் துருவி ஆராயும் சிந்தனைமிக்கவர்களாக இருத்தல்
- சுயமாகச் சிந்தித்துக் கருத்துகளை வெளியிடுதல்
- தாம் ஈடுபடும் செயல்களை எண்ணிப் பெருமிதம் கொள்ளுதல்
- நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளுதல்
- சிங்கப்பூரை நேசித்தல்

# உள்ளடக்கம்


**தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டம் ............ 1**

முன்னுரை ............ 1
பள்ளிகளில் தமிழ்மொழி கற்றலும் கற்பித்தலும் ............ 1
தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டத்தின் அடிப்படைக் கூறுகள் ............ 3

**இயல் 1 : தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2008 (தொடக்கநிலை) ............ 5**

1.1 அடிப்படை மொழித்திறன்கள் ............ 5
1.2 சிந்தனைத்திறன் ............ 5
1.3 தேசியக் கல்வி ............ 5
1.4 தகவல் தொழில்நுட்பம் ............ 6
1.5 மரபுவழிப் பண்புகள் ............ 6
1.6 சமூக மனவுணர்வு சார்ந்த கற்றல் ............ 7
1.7 தமிழ்மொழிப் பாடத்திற்கான கால அளவு ............ 7
1.8 பள்ளி சார்ந்த பாடக்கலைத்திட்டம் ............ 8
1.9 பாடத்திட்டச் செயலாக்கம் ............ 8

**இயல் 2 : தமிழ்மொழி கற்றல் ............ 9**

2.1 கற்றல் விளைவுகள் ............ 9
2.2 மொழித்திறன்கள் ............ 14
2.3 பேச்சுத்தமிழ் ............ 18
2.4 தமிழ் எழுத்துகளைக் கற்பித்தல் ............ 19
2.5 இலக்கணம், மொழிக்கூறுகள் ............ 23
2.6 செய்யுள் / பழமொழிகள் ............ 25

**இயல் 3 : தமிழ்மொழி கற்பித்தல் ............ 31**

3.1 தமிழ்மொழி கற்பித்தலின் முக்கியக் கூறுகள் ............ 31
3.2 கருத்துப்பரிமாற்ற அணுகுமுறை ............ 31
3.3 ஈடுபாடுமிக்க கற்றல் கோட்பாடுகள் ............ 37
3.4 பல்வகை நுண்ணறிவுத் திறன்கள் ............ 38
3.5 திறனறிந்து கற்பித்தல் அணுகுமுறை ............ 39
3.6 புளூம் கோட்பாடு ............ 39
3.7 கூடிக்கற்றல் உத்திகள் ............ 40
3.8 முனைப்புடனும் சுயமாகவும் கற்கும் உத்திகள் ............ 40
3.9 கருப்பொருள்கள் ............ 41
3.10 மதிப்பீடு ............ 43

**இயல் 4 : அடிப்படைத்தமிழ்ப் பாடத்திட்டம் ............ 48**

4.1 நோக்கங்கள் ............ 48
4.2 கற்றல் விளைவுகள் ............ 48
4.3 மொழித்திறன்கள் ............ 50
4.4 கருப்பொருள்கள் ............ 51
4.5 நடவடிக்கைகள் ............ 52

**பின்னிணைப்பு ............ 53**

# தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டம்

## முன்னுரை

சிங்கப்பூரின் நான்கு அதிகாரத்துவ மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகும். நமது குடியரசின் இருமொழிக் கல்விக் கொள்கையின் அடிப்படையில் தமிழ்மொழி தாய்மொழிப் பாடமாகப் பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றது.

## பள்ளிகளில் தமிழ்மொழி கற்றலும் கற்பித்தலும்


### நோக்கங்கள்

தமிழ்மொழி கற்றலும் கற்பித்தலும் பின்வரும் இரு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நடைபெறவேண்டும்:

- அடிப்படை மொழித்திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் மாணவர்களுக்கு முறையாகப் பயிற்சியளித்தல்

- தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளையும் பாரம்பரியக் கூறுகளையும் மாணவர்களுக்கு நன்கு விளக்குவதோடு நாட்டுருவாக்கத்திற்குத் தேவையான பண்புநலன்களைப் பெற்றிடவும் செய்தல்

# தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டம் 2008




## கற்றல் விளைவுகள்

**தொடக்கநிலை**

மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட பொருத்தமான பனுவல்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர்; பேச்சுத்தமிழில் சிரமமின்றி உரையாடுவர்; வயதிற்குப் பொருத்தமான பனுவல்களைப் படிப்பர். அனுபவத்திற்கு உட்பட்ட எளிய நிகழ்வுக் கட்டுரைகளையும் விளக்கக் கட்டுரைகளையும் எழுதுவர்.

**உயர்நிலை**

மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட பொருத்தமான பனுவல்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர்; பேச்சுத்தமிழில் சரளமாக உரையாடுவர்; கருத்துகளை எழுத்துத்தமிழிலும் கூற அறிந்திருப்பர். வயதிற்குப் பொருத்தமான கவிதைகள், எளிய கட்டுரைகள், சிறுகதைகள் படிப்பர்; பல்வகையான கட்டுரைகளை எழுதுவர்.

**தொடக்கக் கல்லூரி**

மாணவர்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் பொருத்தமான பனுவல்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர்; சரளமாக உரையாடுவர்; கருத்துகளைப் பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் பேசுவர்; ஒரு கூட்டத்தின்முன் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள் பற்றிய கருத்துகளைப் பேசுவர்; சிறுகதைகள், கட்டுரைகள், நாவல்கள் படிப்பர்; பல்வகையான கட்டுரைகளை எழுதுவர்.

வீடு

**இலக்கு**

சிங்கப்பூரில் தமிழை வாழும் மொழியாக்குதல்

சமூகம்

## தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டத்தின் அடிப்படைக் கூறுகள்

தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டம் மாணவர்களை மையமாகக்கொண்டு வரையப்பட்டுள்ளது. இப்பாடக்கலைத்திட்டம் மூன்று முக்கிய அடிப்படைக் கூறுகளைக் கொண்டுள்ளது. அவையாவன:

1. தேவைக்கேற்ற நெகிழ்வுத்தன்மைமிக்க பாடத்திட்டம்
2. ஆர்வமூட்டும் கற்பித்தல்முறை
3. அர்த்தமுள்ள மதிப்பீடு

இந்த மூன்று அடிப்படைக் கூறுகளைச் செம்மையாக அமைப்பதன்வழித் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் இலக்கை நம்மால் எளிதில் அடையமுடியும். இந்த இலக்கை நாம் அடைய வீடு, பள்ளி, சமூகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சி மிகவும் அவசியமாகும்.

### தேவைக்கேற்ற நெகிழ்வுத்தன்மைமிக்க பாடத்திட்டம்

இப்பாடத்திட்டம் பலதரப்பட்ட மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும் நெகிழ்வுத்தன்மை மிக்கதாகவும் அமைந்துள்ளது. மாணவர்கள் பேச்சுத்தமிழையும் எழுத்துத்தமிழையும் சிரமமின்றிக் கற்கவும் தமிழின்பால் ஆர்வங்கொள்ளவும் இப்பாடத்திட்டம் வழிவகுக்கும். பள்ளியில் மட்டுமன்றிப் பள்ளிக்கு அப்பாலும் தமிழ்மொழியின் புழக்கத்தை அதிகரித்துச் சிங்கப்பூரில் தமிழை வாழும் மொழியாக நிலைத்திருக்கச் செய்யவும் இது உறுதுணைபுரியும். சிங்கப்பூர் மண்வாசனையுடனும் புத்துணர்வூட்டும் வகையிலும் பயிற்றுகருவிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழி கற்றல் வெற்றி பெறவேண்டுமாயின் இப்பயிற்றுகருவிகளின் துணைகொண்டு உயிரோட்டமிக்க வகுப்பறைச் சூழலை ஏற்படுத்தி ஆர்வமூட்டும் வகையில் கற்பித்தல் நிகழ்த்தல் வேண்டும்.

பாடத்திட்டத்தில் கேட்டல், பேசுதல் திறன்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் சரளமாகத் தமிழில் பேசும் ஆற்றலைப் பெறுவார்களாயின் படித்தல், எழுதுதல் திறன்களைக் கைவரப்பெறுதல் எளிதாகிவிடும். தமிழைப் பயன்படுத்துவதற்குரிய சூழலை உருவாக்கிப் பேச்சுத்தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தமிழ்ப்பாடங்கள் நடத்தப்படவேண்டும். இதன்வழி மாணவர்கள் அச்சமின்றித் தங்கள் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதோடு தயக்கமின்றி நண்பர்களோடும் சமூகத்தினரோடும் தமிழில் கலந்துரையாடுவர்.

### ஆர்வமூட்டும் கற்பித்தல்முறை

தமிழ்மொழி கற்றல் என்பது மாணவர்களுக்கு ஒரு சுகமான அனுபவமாக அமைய வேண்டும். எனவே, அவர்களுக்குத் தமிழ்மொழியில் ஈடுபாடும் ஆர்வமும் ஏற்படுத்தும் கற்பித்தல்முறை வலியுறுத்தப்படுகிறது. மாணவர்களின் தேவைகளையும் திறன்களையும் அறிந்து பல்வேறுபட்ட பயன்முனைப்புமிக்க கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் தமிழ்மொழி கற்றலில் ஆர்வமும் ஈடுபாடும் காட்டுவர். பள்ளியிலும் பள்ளி வாழ்க்கைக்கு அப்பாலும் தமிழ்மொழியின் புழக்கம் மாணவர்களிடையே நிலைத்திருக்க உதவும் வகையில், தமிழ்மொழி கற்றல் நீடித்த அனுபவமாக அமைதல் அவசியம்.

## அர்த்தமுள்ள மதிப்பீடு

மாணவர்களின் கற்றலை மேம்படுத்தக்கூடிய அர்த்தமுள்ள தேர்வுமுறை வலியுறுத்தப்படுகிறது. தொடக்கநிலை 1, 2 வகுப்புகளில் முறைசாரா மதிப்பீட்டின்வழிப் பேசுதல், கேட்டல், படித்தல் திறன்களை மேம்படுத்த உதவும் வகையில் மதிப்பீடு அமைதல் சிறப்பு. மதிப்பீட்டு நடவடிக்கைகளின் கடினத்தன்மை அந்தந்த வகுப்புகளின் தரத்திற்கு ஏற்புடைய வகையில் அமைதல் மிக அவசியமாகும்.

இக்காலக்கட்டத்தில் மொழிப் பயன்பாடு அதிவேக மாற்றங்களைக் கண்டுவருகிறது. இதை மனத்திற்கொண்டு, மாணவர்களின் தேவைக்கேற்பப் பாடத்திட்டத்தில் மாற்றங்கள் பல செய்யப்பட்டுள்ளன. சிங்கப்பூரில் தமிழ் கற்றலை வளம்பெறச் செய்யும் நோக்கில் பல நவீனக் கற்பித்தல் முறைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. மாணவர்களின் திறனுக்கேற்பத் தமிழைப் பயன்படுத்துவதற்கான சூழலை உருவாக்கி ஊக்கமூட்டும் வகையில் கற்பித்தால் கற்றல் விளைவுகளை அடைவது எளிதான செயலாகிவிடும்.

# இயல் 1

# தமிழ்மொழிப் பாடத்திட்டம் **2008**
# (தொடக்கநிலை)

# இயல் 1 : தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2008 (தொடக்கநிலை)

இப்பாடத்திட்டம் கருத்துப்பரிமாற்றத்திற்கு அடிப்படைத் தேவைகளாக அமையும் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு மொழித்திறன்களை மையமாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. மொழித்திறன்களில் மாணவர்களுக்குப் போதிய பயிற்சி கொடுத்து வளர்ப்பதே மொழி கற்பித்தலின் முக்கிய நோக்கமாகும்.

கருத்துப்பரிமாற்றம் சிறப்பாக நிகழ்வதற்கு அதில் ஈடுபடுவோர் அதன் நோக்கம், அது நிகழும் சூழல் முதலியவற்றை முதலில் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இவற்றோடு ஏற்ற மொழி வடிவம், தொனி, மெய்ப்பாடு, சமூகப் பண்புகள் முதலியவற்றையும் கருத்திற்கொள்ள வேண்டும். இவை கருத்துப்பரிமாற்றம் செம்மையாக நிகழ்வதற்கு இன்றியமையாத கூறுகளாகும்.

இன்றைய சூழலில் சிந்தனைத்திறன், தேசியக் கல்வி, தகவல் தொழில்நுட்பம், மரபுவழிப் பண்புகள், சமூக மனவுணர்வுப் பண்புகள் முதலியவற்றையும் மொழிக்கல்வியின் வாயிலாக மாணவர்களுக்கு வலியுறுத்த வேண்டும்.

## 1.1 அடிப்படை மொழித்திறன்கள்

மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவை இயல் 2-இல் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

## 1.2 சிந்தனைத்திறன்

சிந்தனைத்திறனை மொழி கற்பித்தலோடு ஒருங்கிணைக்கும்போது, பின்வரும் நெறிமுறைகளை மனத்திற்கொள்ள வேண்டும்:

- மொழி கற்றல், கற்பித்தலின் வாயிலாகச் சிந்தனைத்திறனையும் வளர்த்தல்
- சிந்தனைத்திறனைத் தனிப் பாடமாகக் கற்பிக்காமல் மொழி நடவடிக்கைகளோடு இணைத்தல்
- ஒன்றைப் பல கோணங்களில் சிந்திப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் வழிவகுக்கும் வகையில் மொழி நடவடிக்கைகளை அமைத்தல்
- காலப்போக்கில் மாணவர்களின் சிந்தனை விரிவாகவும், ஆழமாகவும், விரைவாகவும் செயற்படும் வகையில் தரம் அறிந்து தகுந்த மொழி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

## 1.3 தேசியக் கல்வி

தேசியக் கல்விச் செய்திகளை மையமாகக்கொண்ட சில பாடங்கள் பாடநூல்களிலும் பயிற்சிநூல்களிலும் இடம்பெற்றுள்ளன. இப்பாடங்களைத் தவிர, மற்றப் பாடங்களிலும் வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம் தேசியக் கல்விச் செய்திகளைத் தொடர்புபடுத்திக் கற்பிக்கலாம். தேசியக் கல்விச் செய்திகளை நேரடியாகக் குறிப்பிடாமல் சூழல் அடிப்படையில் நாட்டின் வரலாறு, வளர்ச்சி, எதிர்நோக்கும் சவால்கள், எதிர்காலத் திட்டங்கள் முதலியவற்றோடு தொடர்புபடுத்தி மாணவர்களைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும். நாட்டின் குடிமக்கள் என்ற அடிப்படையில்

மாணவர்களுக்குத் தங்கள் கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும்.

**தேசியக் கல்விச் செய்திகள்**

1. சிங்கப்பூர் நமது தாயகம்; இந்த நாட்டிற்கு உரிமையானவர்கள் நாம்.
2. இன, சமய நல்லிணக்கத்தைக் கட்டிக் காப்போம்.
3. தகுதிக்கு முதன்மை கொடுப்போம்; ஊழலைத் தடுப்போம்.
4. சிங்கப்பூரின் வாழ்வுக்குக் கடப்பாடு உடையவர்கள் நாமே; வேறு யாரும் அல்லர்.
5. சிங்கப்பூரை நாமே தற்காக்க வேண்டும்.
6. நம் எதிர்காலத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது.

## 1.4 தகவல் தொழில்நுட்பம்

- தகவல் தொழில்நுட்பத்தைக் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் பொருத்தமாகப் பயன்படுத்தி மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டிப் பாடத்தை நன்கு புரிந்துகொள்ளச் செய்தல்
- தமிழில் தட்டச்சு முறையைத் தொடக்கநிலை மூன்றாம் வகுப்புமுதல் தொடங்குதல்
- மேல் தொடக்கநிலை மாணவர்கள் இணையத்தைப் பயன்படுத்தி எளிய தகவல் தொழில்நுட்பப் படைப்புகளை உருவாக்குதல்; அவற்றை வகுப்பில் படைத்துக் கலந்துரையாடும்போது பேச்சுத்தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
- தங்களுக்குத் தேவையான தகவல்களை இணையத்தின்வழிச் சேகரிப்பதற்கும் மின்னஞ்சல்வழிக் கருத்துப்பரிமாற்றம் நிகழ்த்துவதற்கும் மாணவர்களுக்குப் பயிற்சிகளையும் வாய்ப்புகளையும் ஆசிரியர்கள் ஏற்படுத்தித் தருதல்
- மேலும், பின்னிணைப்பு 1-இல் தரப்பட்டுள்ள தொடக்கப்பள்ளிகளுக்கான தகவல் தொடர்புத் தொழில்நுட்பச் செயல்திறன் அட்டவணையைப் பார்க்கவும்

## 1.5 மரபுவழிப் பண்புகள்

பண்பாடு தொடர்பான செய்திகளைத் தாய்மொழிக் கல்வியின் வாயிலாக மாணவர்களுக்குக் கற்பிப்பதே சாலச் சிறந்தது. எனவே, தமிழர் நாகரிகம், கலைகள், பாரம்பரியம், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் முதலிய பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை மாணவர்களின் அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப ஒருங்கிணைத்துக் கற்பிப்பது அவசியம்.

- மரபும் பண்பாடும் என்னும் கருப்பொருளில் இடம்பெறும் பாடங்கள்வழிக் கலைகள், விழாக்கள், பண்டிகைகள் முதலானவற்றைப்பற்றி விளக்குதல்

- பயன்படுத்தும் மொழி, ஒருவரின் பண்பை அளவிட்டறிய உதவும் என்பதை அறிந்து தமிழைத் தக்கவாறு பயன்படுத்தத் தெரிந்துகொள்ளுதல்
- ஓர் இனத்தவரின் பண்பாட்டு விழுமங்களையும் நன்னெறிப் பண்புகளையும் அறிந்துகொள்ளுதல்
- தம் மரபுவழிகளையும் அடையாளத்தையும் மாணவர்கள் தெரிந்துகொள்ளுதல்

## 1.6 சமூக மனவுணர்வு சார்ந்த கற்றல்

சுய, மன நலன் (personal and mental well-being), பண்புநலன்கள் (character), குடியுரிமை (citizenship), கல்வித் தேர்ச்சி (academic achievement), வாழ்க்கைத் தொழில் (employment) ஆகிய ஐந்து கூறுகளில் மாணவர்கள் சிறந்து விளங்கத் துணைசெய்யும் கற்றல் முறையே சமூக மனவுணர்வு சார்ந்த கற்றலாகும் (Social & Emotional Learning).

சமூக மனவுணர்வு சார்ந்த கற்றல் முழுமையான கல்விக்கு ஒரு முக்கிய அங்கம் என்பதையும் வாழ்க்கையில் சிறந்து விளங்குவதற்கு இவை மிக அவசியம் என்பதையும் ஆசிரியர்கள் நன்குணர வேண்டும். தங்களுக்கும் தங்கள் மாணவர்களுக்கும் இடையே உள்ள உறவினை மேம்படுத்திக்கொள்ள இக்கற்றல் உதவும் என்பதையும் ஆசிரியர்கள் கருத்திற்கொள்ள வேண்டும்.

## 1.7 தமிழ்மொழிப் பாடத்திற்கான கால அளவு

தமிழ், உயர்தமிழ்ப் பாடங்களுக்கான பாடத்திட்ட நேரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**கால அளவு (மணி நேரம்)**

| நிலை / பிரிவு | தொ.நி 1 | தொ.நி 2 | தொ.நி 3 | தொ.நி 4 | தொ.நி 5 | தொ.நி 6 |
|---|---|---|---|---|---|---|
| தமிழ் | 6.5 | 5.5 | 4.5 - 5 | 4 | 4 | 4 |
| உயர்தமிழ் | - | - | - | - | *1 | *1 |
| அடிப்படைத்தமிழ் | - | - | - | - | +2.5 | +2.5 |

* தொடக்கப்பள்ளியில் உயர்தமிழ் பயிலும் மாணவர்கள், தமிழ் பயிலும் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நான்கு மணி நேரத்துடன் கூடுதலாக ஒரு மணி நேரம் உயர்தமிழ்ப் பாடத்தையும் பயில்வர் (மொத்தம் 5 மணி நேரம்).

+ refer to the notification PP/01/08 dated 17 March 2008

## 1.8 பள்ளி சார்ந்த பாடக்கலைத்திட்டம் (School-based Curriculum)

ஒவ்வொரு பள்ளியும் தன் மாணவர்களின் தேவைகளுக்கும் திறன்களுக்கும் ஏற்பச் சுயமாகப் பாடங்களைத் திட்டமிட்டு நடத்துவதற்கு வழிவகுப்பதே பள்ளி சார்ந்த பாடக்கலைத்திட்டமாகும். தமிழ்மொழிப் பாடத்திட்டமும் ஆசிரியர்கள் தமிழ்மொழிப் பாடங்களைச் சுயமாகத் திட்டமிட்டு நடத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இப்பாடத்திட்டத்தில் 15%முதல் 20%வரையிலான பாடவேளைகள் பள்ளி சார்ந்த பாடக்கலைத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் இதன்மூலம் பள்ளியின் தேவைகளுக்கேற்பவும் மாணவர்களின் தேவைகளை நிறைவுசெய்யும் வகையிலும் வளமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும்.

## 1.9 பாடத்திட்டச் செயலாக்கம்

இந்தப் பாடத்திட்டம் 2008-ஆம் ஆண்டுமுதல் நடப்புக்கு வருகிறது.

| நிலை / பிரிவு | தொ.நி 1 | தொ.நி 2 | தொ.நி 3 | தொ.நி 4 | தொ.நி 5 | தொ.நி 6 |
|---|---|---|---|---|---|---|
| தமிழ் | 2008 | 2008 | 2008 | 2008 | 2009 | 2010 |
| உயர்தமிழ் | - | - | - | - | 2009 | 2010 |
| அடிப்படைத்தமிழ் | - | - | - | - | 2009 | 2010 |

# இயல் 2

# தமிழ்மொழி கற்றல்

# இயல் 2 :  தமிழ்மொழி கற்றல்

## 2.1 கற்றல் விளைவுகள்

ஒரு குறிப்பிட்ட கல்வித் திட்டத்தின் முடிவில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் செயல் விளைவுகளே கற்றல் விளைவுகள் எனப்படுகின்றன. தொடக்கப்பள்ளிகளில் தமிழ் கற்கும் மாணவர்கள் இரண்டாம், நான்காம், ஆறாம் ஆண்டுகளின் இறுதியில் தமிழ்மொழியில் எத்தகைய செயல்திறன் உடையவர்களாகத் திகழ்வர் என்பதை அடிப்படையாகக்கொண்டு கற்றல் விளைவுகளும் அடைவுநிலைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகுப்பிற்கும் கற்பித்தல் குறிக்கோள்களைத் தீர்மானிப்பதற்கும் மாணவர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கும் இங்குத் தரப்பட்டுள்ள கற்றல் விளைவுகளை வழிகாட்டியாகக் கொள்ளலாம். இவற்றைப் பயன்படுத்தும்போது இடைப்பட்ட ஆண்டுகளுக்கான அடைவுநிலைகளைச் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, தொடக்கநிலை ஒன்றாம் வகுப்பு ஆசிரியர் தொடக்கநிலை இரண்டாம் வகுப்பு ஆசிரியரோடு கலந்துபேசி தொடக்கநிலை ஒன்றாம் வகுப்புக்கான அடைவுநிலைகளைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். தொடக்கநிலை மூன்றாம், ஐந்தாம் வகுப்பு ஆசிரியர்களும் இவ்வாறே தத்தம் வகுப்புகளுக்கான அடைவுநிலைகளைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

**கற்றல் விளைவுகளும் அடைவுநிலைகளும்**

## கேட்டல்

**கற்றல் விளைவு:** மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட பொருத்தமான பனுவல்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர்.

| தொடக்கநிலை<br>2-ஆம் ஆண்டின் இறுதியில் | தொடக்கநிலை<br>4-ஆம் ஆண்டின் இறுதியில் | தொடக்கநிலை<br>6-ஆம் ஆண்டின் இறுதியில் |
|---|---|---|
| **மாணவர்கள்**<br><br>• எளிய கட்டளைகளைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br><br>• எளிய பாடல்களையும் கதைகளையும் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br><br>• தமிழ் எழுத்துகள், எளிய சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள். | **மாணவர்கள்**<br><br>• பல்வேறு கட்டளைகளையும் அறிவிப்புகளையும் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br><br>• பாடல், கதை, கதைப்பாடல், உரையாடல் முதலியவற்றைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br><br>• எளிய பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள். | **மாணவர்கள்**<br><br>• பல்வேறு பேச்சுப் பனுவல்களையும் எழுத்துப் பனுவல்களையும் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br><br>• பேச்சுத்தமிழையும் எழுத்துத்தமிழையும் வேறுபடுத்தியறிந்து தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br><br>★ செய்தி நிகழ்ச்சிகள், சொற்போர், கலந்துரையாடல் முதலிய பல்வேறு தகவல் நிகழ்ச்சிகளைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள். |

மாணவர்கள் தமது புரிந்துணர்வை வாய்மொழியாகவோ மெய்ப்பாடு வாயிலாகவோ அல்லது இரண்டு விதத்திலும் புலப்படுத்துவார்கள். வரிவடிவத்திலும் வெளிப்படுத்துவார்கள்.

★ உயர்தமிழுக்கு மட்டும் உரியது.

| பேசுதல் | | |
|---|---|---|
| **கற்றல் விளைவு:** மாணவர்கள் பேச்சுத்தமிழில் சிரமமின்றி உரையாடுவர். | | |
| **தொடக்கநிலை<br>2-ஆம் ஆண்டின் இறுதியில்** | **தொடக்கநிலை<br>4-ஆம் ஆண்டின் இறுதியில்** | **தொடக்கநிலை<br>6-ஆம் ஆண்டின் இறுதியில்** |
| **மாணவர்கள்**<br>• தமது விருப்பங்களைத் தெரிவிப்பதுடன் தமக்கு விருப்பமான தலைப்புகளிலும் பேச்சுத்தமிழில் தெளிவாகப் பேசுவார்கள்.<br>• தெளிவாகப் பாடுவார்கள்; கதை சொல்வார்கள்.<br>• படத்தையோ பொருளையோ பார்த்து அல்லது சுட்டிக்காட்டித் தமது கருத்தைப் பேச்சுத்தமிழில் தெளிவாக வெளிப்படுத்துவார்கள். | **மாணவர்கள்**<br>• தமது எண்ணங்களைத் தெரிவிப்பதுடன் தமக்கு விருப்பமான தலைப்புகளிலும் பேச்சுத்தமிழில் தெளிவாகவும் சரளமாகவும் பேசுவார்கள்.<br>• தெளிவாகவும் சரளமாகவும் கதை கூறுவார்கள்; எளிய படைப்புகளைப் பேச்சுத்தமிழில் தெளிவாகவும் சரளமாகவும் விளக்குவார்கள்.<br>• வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ற தலைப்புகளையொட்டித் தமது எண்ணங்களையும் கருத்துகளையும் தெளிவாகவும் சரளமாகவும் வெளிப்படுத்துவார்கள். | **மாணவர்கள்**<br>• பல்வேறு தலைப்புகளிலும் சூழல்களிலும் தமது எண்ணங்களையும் கருத்துகளையும் பேச்சுத்தமிழில் தெளிவாகவும் சரளமாகவும் வெளிப்படுத்துவார்கள்.<br>• பல்வேறு பேச்சுச் சூழல்களிலும் படைப்புகளின்போதும் சூழலுக்கேற்பப் பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ தன்னம்பிக்கையுடனும் சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் பேசுவார்கள்.<br>★ தமது எண்ணங்களையும் கருத்துகளையும் சூழலுக்கேற்பப் பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ தன்னம்பிக்கையுடன் சரளமாகவும் சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் பேசுவார்கள். |

★ உயர்தமிழுக்கு மட்டும் உரியது.

| படித்தல் | | |
|---|---|---|
| **கற்றல் விளைவு:** மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட பொருத்தமான பனுவல்களைப் படிப்பர். | | |
| **தொடக்கநிலை<br>2-ஆம் ஆண்டின் இறுதியில்** | **தொடக்கநிலை<br>4-ஆம் ஆண்டின் இறுதியில்** | **தொடக்கநிலை<br>6-ஆம் ஆண்டின் இறுதியில்** |
| **மாணவர்கள்**<br>• தனி எழுத்துகளையும் சொற்களையும் அடையாளம் கண்டு எழுத்துக்கூட்டிச் சரியான உச்சரிப்போடு வாய்விட்டுப் படித்துத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br>• எளிய சொற்றொடர்களையும் வாக்கியங்களையும் படித்துத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br>• வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ற எளிய கதைகளை வாய்விட்டுப் படித்துத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள். | **மாணவர்கள்**<br>• வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ற பல்வேறு பனுவல்களைச் சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் வாய்விட்டுப் படித்துத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br>• வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ற பல்வேறு பனுவல்களை மனமகிழ்ச்சிக்காகப் படித்துத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள். | **மாணவர்கள்**<br>• வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ற பல்வேறு பனுவல்களைச் சரியான உச்சரிப்புடன் சரளமாகவும் பொருத்தமான தொனியுடனும் வாய்விட்டுப் படித்துத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br>• தகவல்களை அறியவும் மனமகிழ்ச்சிக்காகவும் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ற பல்வேறு பனுவல்களைப் படித்துத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br>★ வயதுக்கேற்ற எளிய கதை, கவிதை, உரைநடைப்பகுதி முதலியவற்றைப் படித்துத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள். |
| மாணவர்கள் தமது புரிந்துணர்வை வாய்மொழியாகவோ மெய்ப்பாடு வாயிலாகவோ அல்லது இரண்டு விதத்திலும் புலப்படுத்துவார்கள். வரிவடிவத்திலும் வெளிப்படுத்துவார்கள். | | |

★ உயர்தமிழுக்கு மட்டும் உரியது.

| எழுதுதல் | | |
|---|---|---|
| **கற்றல் விளைவு:** மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட எளிய நிகழ்வுக் கட்டுரைகளையும் விளக்கக் கட்டுரைகளையும் எழுதுவர். | | |
| **தொடக்கநிலை 2-ஆம் ஆண்டின் இறுதியில்** | **தொடக்கநிலை 4-ஆம் ஆண்டின் இறுதியில்** | **தொடக்கநிலை 6-ஆம் ஆண்டின் இறுதியில்** |
| **மாணவர்கள்**<br>• தமிழ் எழுத்துகளைப் பிழையில்லாமல் எழுதுவார்கள்.<br>• சொற்களையும் சொற்றொடர்களையும் தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுவார்கள்.<br>• எளிய வாக்கியங்களை ஆசிரியர் உதவியுடன் எழுதுவார்கள். | **மாணவர்கள்**<br>• வயதிற்கேற்ற சொல்வளத்தையும் வாக்கிய அமைப்பையும் பயன்படுத்திப் படங்கள், உதவிச் சொற்கள் முதலியவற்றின் துணையுடன் கதைகளையும் நிகழ்வுக் கட்டுரைகளையும் எழுதுவார்கள். | **மாணவர்கள்**<br>• வயதிற்கேற்ற சொல்வளத்தையும் வாக்கிய அமைப்பையும் பயன்படுத்திப் படங்கள், உதவிச் சொற்கள் முதலியவற்றின் துணையுடன் தொடர்புபடக் கதைகளையும் நிகழ்வுக் கட்டுரைகளையும் எழுதுவார்கள்.<br>★ ஆழ்ந்த புரிந்துணர்வுடனும் பொருத்தமான வாக்கிய அமைப்புடனும் தொடர்புபட நிகழ்வுக் கட்டுரை, விளக்கக் கட்டுரை, வர்ணனைக் கட்டுரை முதலியவற்றை எழுதுவார்கள். |

★ உயர்தமிழுக்கு மட்டும் உரியது.

## 2.2 மொழித்திறன்கள்

### கேட்டலும் பேசுதலும்

வாய்மொழிக் கருத்துப்பரிமாற்றத்திற்கு அடிப்படையாய் அமைவது கேட்டலும் பேசுதலும் ஆகும். தொடக்கநிலை ஒன்றாம், இரண்டாம் வகுப்புகளில் இத்திறன்களுக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். குறிப்பாக, வீட்டில் தமிழ்ப் பின்னணி இல்லாத மாணவர்களுக்கு வாய்மொழித் திறன் சார்ந்த பயிற்சிகளை வழங்குவது இன்றியமையாததாகும். வகுப்பறைக் கற்பித்தலின்போது பேச்சுத்தமிழ் வடிவம் மாணவர்கள் மனத்தில் ஆழப் பதியுமாறு வகுப்பறை நடவடிக்கைகளை அமைக்க வேண்டும். கேட்டல், பேசுதல் பயிற்சிகள் வகுப்பறை நடவடிக்கைகளோடு நெருங்கிய தொடர்புடையவையாக அமையுமாறு ஆசிரியர்கள் பாடங்களைத் திட்டமிட்டு நடத்த வேண்டும்.

மாணவர்களின் திறனுக்கேற்பவும் பின்னணிக்கேற்பவும் கேட்டல், பேசுதல் நடவடிக்கைகள் நிகழ வேண்டும். கேட்டல், பேசுதல் நடவடிக்கைகள் மாணவர்களின் அறிவிற்கும் அனுபவத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்புடையனவா என்பதை ஆசிரியர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும். கதைகள், பாடல்கள், உரையாடல்கள் முதலானவை மாணவர்களின் கேட்டல், பேசுதல் திறன்களை வளர்ப்பதற்கு உகந்த ஊடகங்களாகும்.

**கதைகள்**

கதைகள் கேட்பதனால் மாணவர்களின் கற்பனை வளமும் கூர்ந்து கேட்கும் திறனும் வளர்கின்றன. இவை மட்டுமன்றி, மாணவர்கள் கருத்துத் தொடர்பு கெடாமல் பேசவும் எழுதவும் கதைகள் சிறந்த கருவிகளாக விளங்குகின்றன.

**பாடல்கள்**

சிறுவர் பாடல்கள் மாணவர்களை ஈர்க்கக்கூடியவை. அப்பாடல்களைக் கேட்கச் செய்து அவற்றை மீண்டும் மீண்டும் பாடச் செய்வதன்மூலம் சரியாக உச்சரிக்கும் திறனை வளர்க்கலாம். குரலில் ஏற்ற இறக்கம், சொல்வளப் பெருக்கம் முதலியவற்றிலும் மேம்பாடு காணலாம்.


**உரையாடல்கள்**

உரையாடல்கள் இயல்பான சூழலில் இடம்பெறுதல் வேண்டும். உரையாடல்களின்வழி மாணவர்களின் சிந்தனை ஆற்றலும் சொல் வளமும் பெருகும். மேலும், உரையாடல்களைக் கேட்கச் செய்வதன்மூலம் மாணவர்கள் தெளிவாகவும் திருத்தமாகவும் இயல்பாகவும் பேச அறிந்துகொள்வர்.

மாணவர்களை ஈடுபடுத்தும் வகையில் இந்நடவடிக்கைகளை விளையாட்டு முறையில் நடத்தும்போது கேட்டல், பேசுதல் திறன்கள் இன்னும் மேம்படுகின்றன.

## படித்தல்

மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை இளமையிலேயே தூண்டுவது மிகவும் முக்கியம். எழுத்துகள் அறிமுகப்படுத்தப்படும் காலக்கட்டத்தில் மாணவர்கள் எளிய சொற்களைப் படிக்கும் ஆற்றலை மட்டுமே பெற்றிருப்பர். இதனால், ஆசிரியர்கள் 'பெரிய புத்தகங்களின்' (Big Books) வாயிலாகக் கதைகளைப் படித்துக் காட்டிப் படித்தலில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டவேண்டும். மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் உரக்கப் படிக்க இம்முறை வழிவகுக்கும். படித்தல் இரு வகைப்படும். ஒன்று வாய்விட்டுப் படித்தல்; மற்றொன்று வாய்க்குள் படித்தல்.




### வாய்விட்டுப் படித்தல்

வாய்விட்டுப் படித்தல் தொடக்கநிலையில் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும். குறிப்பாகக் கீழ்த்தொடக்கநிலையில் பயிலும் மாணவர்களுக்கு இது பெருந்துணைபுரியும். வாய்விட்டுப் படித்தல் இரண்டு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது. முதலாவது, சிறார்களுக்கு வாய்விட்டுப் படித்தலே இயல்பாகவும் எளிதாகவும் இருக்கும். இரண்டாவது, மாணவர்கள் இயல்பாகவும் சரளமாகவும் தெளிவான உச்சரிப்புடனும் பேச இது உதவுகிறது. வாய்விட்டுப் படித்தால்தான் சரியான உச்சரிப்புடனும் ஓசை நயத்துடனும் சொல்லழுத்தத்துடனும் வாசிக்கும் திறனைப் பெறமுடியும்.

### வாய்க்குள் படித்தல்

தமிழ்மொழியில் பலவிதமான செய்திகள் நூல்களிலும் செய்தித்தாள்களிலும் சஞ்சிகைகளிலும் இணையத்தளங்களிலும் விரவிக் கிடக்கின்றன. இவற்றை ஒருவர் விரைவாகப் படிப்பதற்கு உகந்தது வாய்க்குள் படித்தலே. வாய்க்குள் படிக்கும்போது கண்ணும் மனமும் மட்டுமே செயற்படுவதால் படிப்பின் வேகம் அதிகரிப்பத்துடன் கருத்துணர்தல் ஆற்றலும் வளர்கிறது. வாய்க்குள் படித்தல் இரு வகைப்படும். ஒன்று ஆழ்ந்த படிப்பு; மற்றொன்று அகன்ற படிப்பு.

**ஆழ்ந்த படிப்பு**

ஆழ்ந்த படிப்பு என்பது கதைப்புத்தகங்கள், நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் முதலியவற்றிலுள்ள கருத்துகளை முழுமையாகவும் ஆழமாகவும் அறிந்துகொள்ள மேற்கொள்ளும் படிப்பாகும். கருத்துகளை ஆழ்ந்த நிலையில் அறிந்துகொள்ளவும் அவை நீண்ட காலத்துக்கு மனத்தில் நிலைத்திருக்கவும் ஆழ்ந்த படிப்பு வழிவகுக்கிறது.

**அகன்ற படிப்பு**

அகன்ற படிப்பு என்பது கதைப்புத்தகங்கள், நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் முதலியவற்றிலுள்ள செய்திகளை மேலோட்டமாக அறிந்துகொள்ளவும் படித்து மகிழ்வதற்கும் மேற்கொள்ளும் படிப்பாகும். பாடவேளையின்போதும் பாடத்திற்கு அப்பாலும் மாணவர்கள் அகன்ற படிப்பில் ஈடுபடலாம். இது சுமையாக இல்லாமல் சுகமான அனுபவமாக அமையுமாறு ஆசிரியர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். மாணவர்கள் தாமாகவே நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்க ஊக்குவிக்க வேண்டும்.

**எழுதுதல்**

ஒருவர் தம் எண்ணங்களுக்கும் கருத்துகளுக்கும் எழுத்து வடிவம் தருவதே எழுதுதல் ஆகும். மாணவர்களிடையே எழுத்துத் திறனை முறைப்படுத்திப் படிப்படியாக வளர்த்தல் வேண்டும். தொடக்கநிலையைப் பொறுத்தவரையில் எழுத்துகளின் வரிவடிவங்களைக் கற்பித்தலே எழுதுதல் நடவடிக்கைகளின் தொடக்கமாகக் கொள்ளப்படுகிறது. அதனைத் தொடர்ந்து, மாணவர்கள் முறையாகச் சொற்களையும், சொற்றொடர்களையும், வாக்கியங்களையும் எழுதக் கற்றுக்கொள்வர்.

தொடக்கநிலை ஒன்றில் கேட்டல், பேசுதல், படித்தல் திறன்களைத் திறம்படக் கற்பித்தால் மாணவர்களின் சொல்வளம் பெருகும். வாக்கிய அமைப்புமுறையும் மனத்தில் நன்கு பதியும். இது எழுதுதல் திறன் மேம்பாட்டுக்கு வழிவகுக்கும்.

தொடக்கநிலை இரண்டாம் ஆண்டின் இறுதியில் மாணவர்கள் தாம் கற்ற சொற்களைக்கொண்டு ஆசிரியர் துணையுடன் எளிய வாக்கியங்களை எழுதும் திறன் பெற்றிருப்பார்கள். மூன்றாம் ஆண்டு இறுதிக்குள் மாணவர்கள் நிரல்பட எளிய வாக்கியங்களை உருவாக்குவார்கள். கட்டுரை எழுதுவதில் மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்க, தனிப்படத்தையோ தொடர்படங்களையோ உதவிச்சொற்களுடன் பயிற்சியாகத் தருதல் வேண்டும். அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த நிலைகளுக்குப் போகும்போது அவர்கள் சுயமாகக் கட்டுரை எழுத ஆசிரியர் வழிகாட்டுதல் வேண்டும். கொடுக்கப்படும் படங்கள், தலைப்புகள் மாணவர்களின் அனுபவத்திற்கு ஏற்புடையவையாகவும் அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துபவையாகவும் இருத்தல் வேண்டும்.

தொடக்கநிலை ஆறாம் ஆண்டுக்கு முன்னரே, தொடக்கப்பள்ளி இறுதித்தேர்வில் எதிர்பார்க்கப்படும் அளவிற்குக் கட்டுரை எழுத வேண்டும் என்று மாணவர்களைக் கட்டாயப்படுத்துதல் சரியான கற்பித்தல் முறை ஆகாது. எனவே, தொடக்கநிலை மூன்றிலிருந்து ஆறுவரை கட்டுரையில் சொற்களின் அளவு படிப்படியாக அதிகரிக்க வேண்டும் என்பதை ஆசிரியர் கட்டாயம் நினைவிற்கொள்ள வேண்டும்.

**கட்டுரை எழுதுவதற்குப் பரிந்துரைக்கப்படும் சொற்களின் எண்ணிக்கை**

| பிரிவு | வகுப்பு | ஆண்டு இறுதிக்குள் |
|---|---|---|
| தமிழ் | தொடக்கநிலை 1 | மாணவர்கள் கட்டுரை எழுதமாட்டார்கள். |
| | தொடக்கநிலை 2 | |
| | தொடக்கநிலை 3 | 40 சொற்கள் |
| | தொடக்கநிலை 4 | 60 சொற்கள் |
| | தொடக்கநிலை 5 | 80 சொற்கள் |
| | தொடக்கநிலை 6 | 90 சொற்கள் |
| உயர்தமிழ் | தொடக்கநிலை 5 | 100 சொற்கள் |
| | தொடக்கநிலை 6 | 135 சொற்கள் |

திறனறிந்து கற்பித்தல் அணுகுமுறையை (Differentiated Instruction) கையாண்டு மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்த்தல் நலம் பயக்கும். மாணவர்கள் திறம்பட எழுதுவதற்கான சொல்வளத்தைப் பெருக்க ஆசிரியர்கள் பொருத்தமான உத்திகளை மேற்கொள்ள வேண்டும்.

கட்டுரை எழுதத் தொடங்கும்போது கருத்துகளைத் தொடர்பு கெடாமல் வெளியிடுவதில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். தங்குதடையின்றி எழுதுவதில் ஓரளவுக்குத் தன்னம்பிக்கை பெற்ற பிறகு, மொழியை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை, குறிப்பாக இலக்கணம், மொழிமரபு முதலியவற்றை மாணவர்களுக்குப் படிப்படியாக விளக்கலாம்.

**சொல்வதெழுதுதல்**

மாணவர்கள் தமிழ்ச் சொற்களின் ஒலி வடிவத்தையும் எழுத்து வடிவத்தையும் நன்கு அறிந்துகொள்ளவும் அவர்கள் செய்யும் பிழைகளைக் கண்டறியவும் பள்ளிகளில் சொல்வதெழுதுதல் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. தனிச்சொற்கள் இடம்பெற்றிருக்கும் பட்டியலை மனனம் செய்து எழுதுவது என்பது மாணவர்களுக்குச் சுமையாய் அமையலாம். சொல்வதெழுதுதலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதும் தேவைக்கும் அதிகமாகப் பயிற்சிகள் கொடுப்பதும் மாணவர்களுக்கு மொழியின்பால் உள்ள ஆர்வத்தைப் பாதிக்கும். சில விளையாட்டு முறைகளின்வழிச் சொற்களைப் பிழையில்லாமல் எழுதுவது எப்படி என்பதை மாணவர்கள் தெரிந்துகொள்ளும்படி செய்யலாம். மற்றொரு வழி, ஒரு சூழலை விளக்கி, அதில் இடம்பெற்றிருக்கும் குறிப்பிட்ட சொற்களை மட்டும் எழுத வைக்கலாம். இதனால், மாணவர்கள் சொற்களைப் பிழையில்லாமல் எழுதத் தெரிந்துகொள்வதோடு அதன் பயன்பாட்டையும் தெரிந்துகொள்கின்றனர்.

தன்னம்பிக்கையோடு பேசுவதற்கு முதலில் மாணவர்களுக்குப் பயிற்சியளித்து, மெல்ல மெல்ல, எழுத்திற்கு மாணவர்களைத் தயார்செய்தால், அவர்கள் மொழியை மகிழ்ச்சியுடன் கற்றுப் பயன்படுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

## 2.3 பேச்சுத்தமிழ்

ஒரு மொழிக்கு அடிப்படையானது பேச்சு வழக்குத்தான். பேசப்படாத எந்த மொழியும் நிலைத்து வாழ முடியாது. கருத்துப்பரிமாற்றமே மொழியின் முக்கியப் பயன்பாடாகும். இக்கருத்துப்பரிமாற்றம் பேச்சு வழியாகவும் எழுத்து வழியாகவும் நிகழ்கிறது. எழுத்தைக் காட்டிலும் பேச்சுத்தான் கருத்துப்பரிமாற்றத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது.

### தமிழ் - இரட்டை வழக்கு மொழி

தமிழ்மொழி இரு வடிவங்களைக் கொண்டது. ஒன்று, எழுத்துத்தமிழ். இது எழுத்திலும் மரபு நிலை சார்ந்த பேச்சிலும் பயன்படுத்தப்படுகிறது. மற்றொன்று, பேச்சுத்தமிழ். இது அன்றாடப் பேச்சு வழக்கில் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளப் பயன்படுகிறது. பழங்காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் பலவகை வட்டார வழக்குகள் இருந்தாலும், கற்றவர்களிடையே பொதுவாகத் தரம் வாய்ந்த பேச்சுத்தமிழை அங்குக் காணமுடிகிறது. அதுபோலவே, மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இத்தகைய தரமான பேச்சுத்தமிழ் வழக்கத்தில் இருப்பதைக் காண்கிறோம். இந்த நாடுகளில் தகவல் தொடர்புச் சாதனங்களிலும் இந்த வடிவமே மிகுதியாகப் பயன்பாட்டில் உள்ளது.

### பாடத்திட்டத்தில் பேச்சுத்தமிழ்

முன்னர்க் கூறிய காரணங்களைக் கருத்திற்கொண்டே, இந்தப் பாடத்திட்டத்தில் பேச்சுத்தமிழுக்குக் கூடுதல் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. மாணவர்களின் மொழித்திறனுக்கு ஏற்ப அவர்களுக்குப் பேச்சுத்தமிழில் போதிய பயிற்சியும் பேசிப் பழகுவதற்குரிய சூழல்களையும் வாய்ப்புகளையும் ஆசிரியர்கள் ஏற்படுத்தித்தர வேண்டும். இவற்றை எளிதில் செயற்படுத்தும் விதமாகச் சில அணுகுமுறைகளும் உத்திகளும் பாடத்திட்ட வழிகாட்டியில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றைச் செயற்படுத்தும்போது சில அடிப்படைச் செய்திகளில் ஆசிரியர்களுக்குத் தெளிவான புரிந்துணர்வு இருத்தல் வேண்டும். அவையாவன:

- பேச்சுத்தமிழ் என்று குறிக்கப்படுவது எது என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளுதல் (சிங்கப்பூர்ச் சூழலில், தமிழை நன்கு பேச அறிந்த ஒருவர், இயல்பாகவும் பிறருக்கு எளிதில் புரியும்படியும் பேசும் தமிழே இங்குப் பேச்சுத்தமிழ் என்று குறிக்கப்படுகிறது.)
- மாணவர்களின் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்புடைய பேச்சுப் பயிற்சிகளை வழங்குதல்
- சூழலுக்கேற்பச் சரியான சொற்களையும் தொனிகளையும் பயன்படுத்திப் பேசப் பயிற்றுவித்தல்
- பொருத்தமான இடங்களில் *'மேலும், ஆனால், மட்டும், முதலான, அடுத்து'* முதலான சொற்களைப் பயன்படுத்தியும் உள்ளத்து உணர்வுகளை வெளிக்காட்டியும் பேசப் பழக்குதல்
- பிறமொழிச் சொற்கள் ஆங்காங்கே பேச்சுத்தமிழில் இடம்பெறுவதை ஓரளவு அனுமதித்தல்
- சரளமாகவும் தன்னம்பிக்கையோடும் பேசும் திறனை வளர்த்தல்
- மாணவர்கள் பேச்சுத்தமிழில் செய்யும் தவறுகளை உடனுக்குடன் திருத்தாமல் அவர்களைத் தொடர்ந்து பேசவிடுதல்

### பேச்சுத்தமிழ் - பயிற்சியும் பயன்பாடும்

தமிழ்மொழியைப் பொறுத்தமட்டில் பேச்சு வழக்கு எழுத்து வழக்கிலிருந்து சிறிது வேறுபட்டிருக்கிறது. இந்த வேறுபாடு பெரிதும் உச்சரிப்பிலும் சொல்லமுத்தத்திலும் காணப்படும். இவ்விரு வழக்குகளுக்குமிடையே உள்ள வேறுபாட்டை, அம்மொழிப் பின்னணியிலிருந்து வரும் மாணவர்களுக்கு அதிகம் விளக்கிச் சொல்லத் தேவையில்லை. அவர்கள் மொழியைக் கற்கின்ற போக்கிலும், மொழியைப் பயன்படுத்துகின்ற சூழலிலும் தாமாகவே விளங்கிக்கொள்வார்கள். ஆனால், இந்த நுட்பமான வேறுபாட்டை மொழிப் பின்னணி இல்லாத மாணவர்களுக்கு விளங்கவைப்பது பெரிய சவாலாகும். அத்தகைய மாணவர்களின் மொழித்திறத்தைப் பொறுத்துப் பல்வேறு அணுகுமுறைகளையும் உத்திகளையும் பயன்படுத்திப் பேச்சு வழக்குக்கும் எழுத்து வழக்குக்கும் உள்ள வேறுபாட்டைக் கற்பித்தலின்போது விளக்க வேண்டும்.

பொதுவாக, மொழி கற்கும் சூழலில், ‘போலச் செய்தல்’ முறை பின்பற்றப்படுகிறது. ஆசிரியரே மாணவர்களுக்கு முன்மாதிரி. அவர் மொழியைக் கையாளும் முறையே மாணவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, பேச்சுத்தமிழை மாணவர்கள் கைவரப்பெறுவது ஆசிரியர்கள் கையில்தான் உள்ளது. வகுப்பில் பேச்சுத்தமிழே கருத்துப்பரிமாற்றத்திற்குப் பயன்படும் ஊடகமாக இருக்க வேண்டும். அதற்கு, ஆசிரியர் நல்லதொரு முன்மாதிரியாய் விளங்குவது அவசியம்.

தொடக்கநிலையில் பேச்சுத்தமிழை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நிலையில் ஒரு திட்டமிட்ட அணுகுமுறையைப் பின்பற்றுவது அவசியம். குறிப்பாக, மொழிப் பின்னணி இல்லாத மாணவர்களுக்கு ஏற்ற வகையில் பேச்சுத்தமிழை எளிய முறையில் பயிற்றுவிக்க வேண்டும்.

## 2.4 தமிழ் எழுத்துகளைக் கற்பித்தல்

ஒவ்வோர் எழுத்தின் ஒலிவடிவமும் வரிவடிவமும் மாணவர்களின் மனத்தில் சரியாகப் பதியுமாறு செய்வது அவசியம். அதேவேளையில் தமிழ் எழுத்துகளின் அறிமுகத்தின்போது, ஆசிரியர் மொழித்திறன்கள் நான்கையும் ஒருங்கிணைத்துக் கற்பிக்க வேண்டும்.

எழுத்துக் கற்பித்தலில் எழுத்துகளை ஒலிப்பது, அடையாளம் காண்பது, எழுதுவது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. எழுத்துகளையும் சொற்களையும் சொற்றொடர்களையும் பனுவல்களையும் பயன்பாட்டுக் கண்ணோட்டத்திலும் தற்போதைய நடைமுறைக்கேற்பவும் மாணவரின் கற்றல் அனுபவத்தோடும் பொருத்திக் கற்பித்தலே, சிறப்புடையதாகவும் தொலைநோக்கில் பயன்தரக்கூடியதாகவும் அமையும்.

தொடக்கநிலை ஒன்றாம் இரண்டாம் வகுப்புகளில் எழுத்துக் கற்பித்தலில் அடிப்படை மொழித்திறன்கள் ஒருங்கிணைக்கப்பட்ட கற்பித்தல் முறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இப்பாடத்திட்டம் நெடுங்கணக்கு முறையில் எழுத்துகளைக் கற்பிக்கும் முறையை வலியுறுத்தவில்லை. மாறாக, ட, ப முதலிய நேர்கோட்டில் அமைந்த எழுத்துகளைக் கற்பிக்கத் தொடங்குவதே விரைவிலும் எளிதிலும் எழுத்துப் பழக்கத்தை விளைவிக்கும் என்பதை வலியுறுத்துகிறது. எனவே, ஆசிரியர்கள் ட, ப, ம, ய, ழ என்ற வரிசையில் எழுத்துகளைக் கற்பிப்பது பொருத்தமானதாகும்.

வாய்மொழித்திறன் வளர்ச்சிக்குச் சொல்வளத்தைப் பெருக்க வகைசெய்யும் பொருட்டு எழுத்துக் கற்பித்தலில் எழுத்துகளின் வரிசை முறையில் சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முந்தைய பாடத்திட்டத்தில் அகர உயிர்மெய்யெழுத்துகள் பதினெட்டும் அகர உயிரெழுத்தும் தொடக்கநிலை

ஒன்றாம் ஆண்டின் முதல் பருவத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆகாரம் முதல் ஔகாரம் வரையிலான உயிரெழுத்துகள் பதினொன்றும் ஏனைய உயிர்மெய்யெழுத்துகளும் இரண்டாம் பருவத்திலும் தொடக்கநிலை இரண்டாம் ஆண்டின் முதல் தவணையிலும் அறிமுகம் செய்யப்பட்டன.

இந்தப் பாடத்திட்டத்தில் தொடக்கநிலை ஒன்றாம் ஆண்டுத் தொடக்கத்திலேயே அகர உயிர்மெய்யெழுத்துகளுடன் ஆகார உயிர்மெய்யெழுத்துகளும் அறிமுகம் செய்யப்படுகின்றன. இதன்வழி ஒலிவடிவத்திலும் வரிவடிவத்திலும் குறில், நெடில் எழுத்துகளில் மாணவர்களுக்கு வலுவான அடிப்படையை ஏற்படுத்த முடியும். மேலும், எழுத்து அறிமுகத்துடன் பொருத்தமான சொற்களும் அவற்றுடன் தொடர்புடைய மற்றச் சொற்களும் அறிமுகப்படுத்தப்படுவதால் மாணவர்களின் வாய்மொழிக் கருத்துப்பரிமாற்றத்திற்கான சொல்வளம் பெருகி, எழுத்துக் கற்பித்தல் மிகவும் அர்த்தமுடையதாகவும் மாணவர்கள் நிலைக்கு ஏற்புடையதாகவும் அமையும்.

**பரிந்துரைக்கப்படும் எழுத்துகளின் வரிசைமுறை :**

| முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு |
|---|---|
| ட, ப, ம, ட், ப், ம், டா, பா, மா | உகர உயிரெழுத்து |
| ர, ய, ழ, ர், ய், ழ், ரா, யா, ழா | உகர உயிர்மெய்யெழுத்துகள் |
| ச, க, த, ச், க், த், சா, கா, தா | ஊகார உயிரெழுத்து |
| ங, ந, ற, ங், ந், ற், ஙா, நா, றா | ஊகார உயிர்மெய்யெழுத்துகள் |
| ல, வ, ள, ஞ, ல், வ், ள், ஞ் | எகர உயிரெழுத்து |
| லா, வா, ளா, ஞா | எகர உயிர்மெய்யெழுத்துகள் |
| ன, ண, ன், ண், னா, ணா | ஏகார உயிரெழுத்து |
| அகர உயிரெழுத்து | ஏகார உயிர்மெய்யெழுத்துகள் |
| ஆகார உயிரெழுத்து | ஐகார உயிரெழுத்து |
| இகர உயிரெழுத்து | ஐகார உயிர்மெய்யெழுத்துகள் |
| இகர உயிர்மெய்யெழுத்துகள் | ஒகர உயிரெழுத்து |
| ஈகார உயிரெழுத்து | ஒகர உயிர்மெய்யெழுத்துகள் |
| ஈகார உயிர்மெய்யெழுத்துகள் | ஓகார உயிரெழுத்து |
| | ஓகார உயிர்மெய்யெழுத்துகள் |
| | ஔகார உயிரெழுத்தும் ஔகார உயிர்மெய்யெழுத்துகளும் |

### நெடுங்கணக்கு வரிசைமுறை

தமிழ் எழுத்துகளை மேற்கண்டவாறு முறையாக மாணவர்களுக்கு அறிமுகப்படுத்திய பின், தமிழ் எழுத்துகளின் நெடுங்கணக்கு வரிசைமுறையின் ஒலிப்பு நிலையையும் வரிவடிவ நிலையையும் அவர்கள் மனத்தில் பதியுமாறு நன்கு கற்பிக்க வேண்டும்.

### கிரந்த எழுத்துகள்

தமிழ் எழுத்துகளோடு, தமிழ் அல்லாத ஒலிப்புகளைக்கொண்ட கிரந்த எழுத்துகளையும் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டியது இக்காலத்தில் அவசியமாகும். எனவே, தமிழ் நெடுங்கணக்கு வரிசைமுறையை மாணவர்கள் முறையாக அறிந்துகொண்ட பிறகு, கிரந்த எழுத்துகளில் அதிகமாக வழக்கில் உள்ள எழுத்துகளைக் கற்பிக்க வேண்டும்.

### எழுத்துகளைக் கற்பித்தலில் கால அளவு

வாய்மொழித்திறன் வளர்ச்சிக்கான கற்பித்தல் முறைகளும் வாய்மொழிச் சொல்வளப் பெருக்கமும் எழுத்துக் கற்பித்தலுடன் ஒருங்கிணைக்கப்படுவதால் இப்பாடத்திட்டத்தில் தமிழ்மொழி மறு ஆய்வுக்குழுவின் பரிந்துரையின்படி எழுத்து அறிமுகம் 1¼ ஆண்டிலிருந்து 2 ஆண்டாக நீட்டிக்கப்படுகிறது. இந்தக் கால நீட்டிப்பினால் எழுத்துக் கற்பித்தலில் மொழித்திறன்களை ஒருங்கிணைத்து அதன்மூலம் எழுத்தைக் கற்றலில் வலுவான அடித்தளத்தை அமைக்க முடியும் எனக் கருதப்படுகிறது. மேலும், எழுத்துக் கற்பித்தலில் அவசரப்போக்கைக் கடைப்பிடிக்காமல் இருந்தால், மாணவர்களை ஈர்க்கும் பல்வேறு புத்தாக்க உத்திகளை ஆசிரியர்கள் பயன்படுத்திக் கற்பிக்க அவகாசம் கிடைக்கும் என்பது மற்றோர் எதிர்பார்ப்பு.

எடுத்த எடுப்பிலேயே குழந்தைகளுக்கு எழுத்தாற்றல் வந்துவிடாது. எழுதுவதற்கு முன்பு பொருளறிவும் வேண்டும்; சொல்லறிவும் வேண்டும். முதலில் பேச்சும், படிப்பும், பின்னர் எழுத்தும் வருவதே முறையாகும். தொடக்க வகுப்புகளில் கேட்டலுக்கும் பேசுதலுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுக் கற்பித்தல் நடைபெறுதல் வேண்டும். இவற்றைக் கருத்திற்கொண்டே இப்பாடத்திட்டத்தில் எழுத்து அறிமுகத்திற்கான கால அளவு நீட்டிக்கப்பட்டுள்ளது.

படம், பொருள், சொல் முதலியவற்றை ஒன்றோடொன்று இணைத்துப் பார்க்கவும் தொடர்புபடுத்தவும் இளம் வயதிலேயே மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டியது அவசியமாகும். வகுப்பறைக்கு அப்பாலும் அவர்கள் மொழியைப் பயன்படுத்துவதற்கு இது பெரிதும் உதவும். இதன்மூலம் இளம் வயதிலேயே மாணவர்களுக்குத் தமிழ் கற்றலில் விருப்பம் ஏற்பட்டுத் தமிழில் படிக்கவும் எழுதவும் ஆர்வம் உண்டாகும்.

எழுத்து அறிமுகத்துக்கான ஈராண்டுக்காலம் மாணவர்கள் தமிழ் எழுத்துகளை ஆர்வத்துடன் கற்றுக்கொள்ள வழிவகை செய்வதோடு பின்வரும் அடிப்படைத் திறன்களைப் பெறவும் உதவும்.

- எழுதுவதற்கு முன் கேட்டல், பேசுதல்மூலம் சொல்வளத்தைப் பெருக்குதல்
- தசைகளையும் புலன்களையும் ஒருசேர இயக்குவதற்குக் கற்றல்
- எழுத்துகளை முறையாகவும் வடிவம் சிதையாமலும் தெளிவான கையெழுத்தில் எழுதவும் பயிற்சி பெறுதல்
- ஒலிவடிவத்தோடு வரிவடிவத்தைத் தொடர்புபடுத்திப் புரிந்துகொண்டு எழுதுதல்
- எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் என எழுத்தாற்றலில் வளர்ச்சி காணுதல்
- சிந்தனைகளையும் கருத்துகளையும் எழுத்தில் வெளிப்படுத்தத் திட்டமிட்ட வழிமுறைகளின்மூலம் எழுத்து நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

மேலும், இந்த ஈராண்டுக்கால எழுத்து அறிமுகத்தின்போது பின்வரும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

- மழலையர் பாடல்கள், சிறுவர் பாடல்கள், கதைப் பாடல்கள் முதலியவற்றுடன் எழுத்துகளையும் எளிய சொற்களையும் சொற்றொடர்களையும் கற்பிக்கலாம்.
- மாணவர்கள் எழுத்துகளையும் சொற்களையும் புரிந்துகொண்டு பயன்படுத்தும் வகையில், பொருத்தமான பல்லூடகக் கணினிவட்டுகளையும் இணையத்தளங்களையும் பயன்படுத்தலாம்.

தொடக்கநிலை ஒன்றில் தொடங்கித் தொடக்கநிலை இரண்டு இறுதிவரை படிநிலை வளர்ச்சியாக மாணவர்கள் அதிக எழுத்துகளையும் சொற்களையும் அறிந்துகொள்வார்கள்; அதிகச் சொல்வளம் மிக்கவர்களாகவும் இருப்பார்கள். இந்தச் சொல்வளம் பேசுதலிலும் படித்தலிலும் வெளிப்படும் அளவைக்காட்டிலும் எழுதுதலில் குறைவாகவே இருக்கும். எழுத்து அறிமுகத்தின்போது பல சொற்களும் சொற்றொடர்களும் கொண்ட வாசிப்புப் பனுவல்களைப் படிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். எழுத்து அறிமுகத்துக்குப்பின் மாணவர்கள் தங்கள் வயதிற்கேற்ற சிறுவர் இலக்கியங்களைப் படிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள்.

## 2.5 இலக்கணம், மொழிக்கூறுகள்

ஒரு மொழியைப் பொருத்தமான முறையில் கையாளுவதற்கு இலக்கணமும் மொழிக்கூறுகள் தொடர்பான பயன்பாடும் மிக அவசியமாகக் கற்பிக்கப்பட வேண்டும். குறிப்பாக, வீட்டுச்சூழலில் அம்மொழி அதிகம் புழக்கத்தில் இல்லாமலிருப்பின், கற்பவருக்கு மொழி குறித்த பின்னணி அதிகம் இருக்காது. அத்தகையோருக்கு இக்கூறுகளைத் தெளிவான முறையில் எளிமையாக விளக்கிச் சொல்ல வேண்டும். இலக்கணம், மொழிக்கூறுகள் ஆகியவற்றில் நல்ல தேர்ச்சி பெற்ற ஒருவரால்தான் அம்மொழியைத் தன்னம்பிக்கையுடனும் சரளமாகவும் கையாள முடியும்.

தொடக்கநிலைப் பாடத்திட்டத்தில் தற்காலத் தேவை, பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மொழிக்கூறுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. கற்பிப்பதற்குரிய இலக்கணமும் மொழிக்கூறுகளும் வகைப்படுத்தப்பட்டும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்டும் தரப்பட்டுள்ளன. இவை தொடர் வாக்கியங்களிலும் சூழல் அடிப்படையிலும் வாசிப்புப் பனுவல்களிலும் பயின்றுவரக் காணலாம்.

### தொடக்கநிலை ஒன்றும் இரண்டும்

எழுத்து அறிமுகத்துக்கு உட்பட்ட நிலையில் இலக்கணமும் மொழிக்கூறுகளும் வெளிப்படையாகக் கற்பிக்கப்படமாட்டா. மாறாகக் கேட்டல், பேசுதல், படித்தல் நடவடிக்கைகள்மூலம் பயன்பாட்டுநிலையிலேயே அவை அறிமுகப்படுத்தப்படும்.

### தொடக்கநிலை மூன்றுமுதல் ஆறுவரை

இலக்கணத்தையும் மொழிக்கூறுகளின் பயன்பாட்டையும் கற்பிக்கும்போது பின்வருவனவற்றைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

- எளிமையிலிருந்து கடினத்திற்கும் அறிந்ததிலிருந்து அறியாததற்கும் செல்ல வேண்டும்.
- மாணவர்களின் அனுபவத்திற்கு உட்பட்ட பயன்பாட்டுநிலையில் கற்பிக்க வேண்டும்.
- படங்கள், கதைகள், நாடகங்கள், விளையாட்டுகள், தகவல் தொழில்நுட்பம் முதலிய வழிகளில் இலக்கணத்தையும், மொழிக்கூறுகளையும் கற்பிக்க வேண்டும்.
- ஏற்கெனவே அறிமுகம் கண்ட இலக்கணத்தையும் மொழிக்கூறுகளையும் பாடத்திருப்பத்தின்மூலம் மாணவர்களுக்கு மீண்டும் நினைவூட்டுதல் வேண்டும்.
- தொடக்கநிலை 5, 6-இல் இடம்பெறும் இலக்கணமும் மொழிக்கூறுகளும் தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் உயர்தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் பொதுவானவை.

கற்பிக்கப்பட வேண்டிய இலக்கணம், மொழிக்கூறுகள் பற்றிய விவரங்கள் பாடத்திட்ட வழிகாட்டியில் தெளிவாக இடம்பெற்றிருக்கின்றன.

## இலக்கணமும் மொழிக்கூறுகளும் (தொடக்கநிலை 1 – 6)

| எண் | தலைப்புகள் | தொ. நி. 1 & 2 | தொ. நி. 3 | தொ. நி. 4 | தொ. நி. 5 | தொ. நி. 6 |
|---|---|---|---|---|---|---|
| | **எழுத்து அறிமுகம்** | | | | | |
| 1. | உயிரெழுத்து | ✓ | | | | |
| 2. | மெய்யெழுத்து | ✓ | | | | |
| 3. | உயிர்மெய்யெழுத்து | ✓ | | | | |
| 4. | ஆய்த எழுத்து | ✓ | | | | |
| 5. | குறில் / நெடில் | ✓ | | | | |
| | | | | | | |
| | **சொற்கள்** | | | | | |
| 6. | பெயர்ச்சொல் | ✓ | | | | |
| 7. | உடன்பாட்டு ஏவல் வினைமுற்று | ✓ | | | | |
| 8. | எதிர்மறை ஏவல் வினைமுற்று | ✓ | | | | |
| 9. | குறிப்பு வினைமுற்று | ✓ | | | | |
| 10. | சுட்டுப்பெயர் | ✓ | | | | |
| | | | | | | |
| | **வாக்கிய அமைப்பு** | | | | | |
| 11. | ஒருமை, பன்மை | ✓ | + | | | |
| 12. | மூவிடப்பெயர் | ✓ | + | | | |
| 13. | காலம் | ✓ | + | | | |
| 14. | பெயரடைமொழி | ✓ | + | | | |
| 15. | வினையடைமொழி | ✓ | + | | | |
| 16. | வினாப்பெயர் | ✓ | + | + | | |
| 17. | வேற்றுமை உருபு | ✓ | + | + | + | + |
| 18. | பதிலிடுபெயர் | ✓ | + | | | |
| 19. | பெயரெச்சம் | ✓ | | + | | |
| 20. | வினையெச்சம் | ✓ | | + | | |
| 21. | எழுவாய், பயனிலை இயைபு | ✓ | | | + | |
| 22. | எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் | ✓ | | | + | |
| 23. | உம் - இணைப்புச் சொல் | | + | | | |
| 24. | ஆனால் - இணைப்புச் சொல் | | | + | | |
| 25. | அதனால் - இணைப்புச் சொல் | | | + | | |
| 26. | வினைமுற்றை வினையெச்சமாக்குதல் | | | | + | |
| 27. | வினைமுற்றைப் பெயரெச்சமாக்குதல் | | | | | + |
| | | | | | | |
| | **நிறுத்தற்குறிகள்** | | | | | |
| 28. | முற்றுப்புள்ளி ( . ) | ✓ | + | | | |
| 29. | வினாக்குறி ( ? ) | ✓ | + | | | |
| 30. | காற்புள்ளி ( , ) | | | + | | |
| 31. | மேற்கோள்குறி ( "   " ) | | | + | | |
| 32. | வியப்புக்குறி ( ! ) | | | | + | |
| | | | | | | |

| எண் | தலைப்புகள் | தொ. நி. 1 & 2 | தொ. நி. 3 | தொ. நி. 4 | தொ. நி. 5 | தொ. நி. 6 |
|---|---|---|---|---|---|---|
| | **சொல் பயன்பாடு** | | | | | |
| 33. | ஒலி வேறுபாட்டுச் சொற்கள் | | + | + | + | |
| 34. | இரட்டைக் கிளவிகள் | | + | | | |
| 35. | அடுக்குத்தொடர்கள் | | | + | | |
| 36. | எதிர்ச்சொற்கள் | | | + | | |
| 37. | போது | | | + | | |
| 38. | பற்றி, போல் | | | + | | |
| 39. | ஒரு பொருள் பல சொல் | | | + | | |
| 40. | பல பொருள் ஒரு சொல் | | | | + | |
| 41. | ஒரு, ஓர் | | | | + | |
| 42. | எண்ணுப்பெயர்கள் | ✓ | + | + | + | |
| 43. | நிரல் அல்லது வரிசை உணர்த்தும் சொற்கள் | | | | + | |
| 44. | சில, சிலர், பல, பலர் | | | | + | |
| 45. | ஆகிய, முதலிய | | | | + | |
| 46. | திசைப்பெயர்கள் | | | | + | |
| | | | | | | |
| | **மொழி மரபுகள்** | | | | | |
| 47. | உறவுமுறைப் பெயர்கள் | ✓ | + | | | |
| 48. | இளமைப் பெயர்கள் / ஒலிகள் | ✓ | + | | | |
| | | | | | | |

பேசுதல் நடவடிக்கை (Spoken ) ✓

இலக்கணம், மொழிக்கூறு (Grammar Focus - explicitly taught) +

## 2.6 செய்யுள் / பழமொழிகள்

தமிழ்மொழியில் பல நீதி இலக்கியங்கள் உள்ளன. பெரியோரை மதித்தல், பெற்றோரைப் பேணுதல், நட்பைப் போற்றுதல், பிறருக்கு உதவுதல், செய்ந்நன்றி அறிதல், இன்னா செய்யாமை, விருந்தோம்பல் முதலான நம் பண்பாட்டுச் செய்திகளின் நிலைக்களனாக நீதி இலக்கியங்கள் திகழ்கின்றன. அவற்றுள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, திருக்குறள் முதலியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றில் உள்ள பல அறக்கருத்துகள் எக்காலத்திற்கும் பொருத்தமானவையாக, வாழ்க்கைக்கு இன்றியமையாதவையாக உள்ளன. இவை தமிழர்களால் வழிவழியாகப் போற்றப்பட்டு வருகின்றன. எனவே, இவற்றை நம் மாணவர்கள் அறிந்துகொள்வது அவசியமாகும். மாணவர்களின் பண்பு வளர்ச்சிக்கும் இது தேவையாகும். இக்காரணங்களுக்காக, நம் மாணவர்களின் மொழிநிலைக்கும் சிங்கப்பூர்ச் சூழ்நிலைக்கும் பொருத்தமான, தேவையான செய்யுள்கள் பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றை முறையாக மாணவர்களுக்குக் கற்பிக்கவும் பொருளை உணர்த்தவும் கதைகள், நாடகங்கள், திரைப்படக் காட்சிகள் முதலானவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

## தொடக்கநிலை மூன்று

### ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஒளவியம் பேசேல்
13. தந்தை தாய்ப் பேண்
14. நன்றி மறவேல்
15. வைகறைத் துயில் எழு

## தொடக்கநிலை நான்கு

### கொன்றைவேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
2. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
3. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
4. தேடாது அழிக்கின் பாடாய் முடியும்
5. நல்லிணக்கம் அல்லது அல்லற்படுத்தும்

### வெற்றிவேற்கை

1. அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்
2. உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்
3. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது
4. பெருமையும் சிறுமையும் தான் தர வருமே
5. மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல்

### பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
2. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
3. அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்
4. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு
5. ஆழம் அறியாமல் காலை இடாதே
6. ஆனைக்கும் அடி சறுக்கும்
7. இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை
8. எறும்பு ஊரக் கல்லும் தேயும்
9. ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா?
10. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

## தொடக்கநிலை ஐந்து

### பழமொழிகள்

1. அடக்கம் ஆயிரம் பொன் பெறும்
2. அடாது செய்பவர் படாது படுவர்
3. அன்பிருந்தால் ஆகாததும் ஆகும்
4. இளமையில் கல்வி சிலையில் எழுத்து
5. உடையவன் பாராத வேலை ஒரு முழம் கட்டை
6. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
7. எரிகிற விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்
8. ஒருவர் பொறை இருவர் நட்பு
9. கற்றது கைமண்ணளவு, கல்லாதது உலகளவு
10. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
11. சிறு துரும்பும் பல் குத்த உதவும்
12. தன் கையே தனக்கு உதவி
13. நல்லவன் என்று பெயர் எடுக்க நாள் செல்லும்
14. நிழலின் அருமை வெயிலில் தெரியும்
15. நிறைகுடம் நீர் தளும்பாது

### திருக்குறள்

1. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
   செயற்கரிய செய்கலா தார்.

2. மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
   என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

3. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
   என்பும் உரியர் பிறர்க்கு.

4. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக.

5. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
   ஞாலத்தின் மாணப் பெரிது.

6. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
   எடுப்பதூஉம் எல்லாம் மழை

7. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
   இழுக்கா இயன்றது அறம்.

8. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
   தன்னையே கொல்லும் சினம்.

9. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

10. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

## உயர்தமிழ்

### திருக்குறள்

11. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

12. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

13. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

14. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

15. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

### மூதுரை

1. நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

2. அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

## தொடக்கநிலை ஆறு

### பழமொழிகள்

1. ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா?
2. கெடுவான் கேடு நினைப்பான்
3. சிறு துளி பெரு வெள்ளம்
4. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்
5. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
6. பகுத்தறியாமல் துணியாதே
7. பதறாத காரியம் சிதறாது
8. புத்திமான் பலவான் ஆவான்
9. பொறுத்தார் பூமி ஆள்வார்
10. மனம் உண்டானால் வழி உண்டாகும்
11. மின்னுவது எல்லாம் பொன்னல்ல
12. முதல் கோணல் முற்றும் கோணல்
13. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்
14 வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
15. வெள்ளம் வரும் முன் அணைகோல வேண்டும்

### திருக்குறள்

1. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

2. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

3. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

4. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

5. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

6. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

7. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

8. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

9. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

10. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

**உயர்தமிழ்**

**திருக்குறள்**

11 அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.

12. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

13. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

14. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

15. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

**நல்வழி**

1. ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும்அந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து.


2. ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

# இயல் 3

# தமிழ்மொழி கற்பித்தல்

# இயல் 3 :  தமிழ்மொழி கற்பித்தல்

## 3.1 தமிழ்மொழி கற்பித்தலின் முக்கியக் கூறுகள்




தொடக்கநிலைப் பாடத்திட்டத்திற்கு அடித்தளமாக அமைவது கேட்டலும் பேசுதலும் ஆகும். அடுத்தபடியாகப் படித்தலுக்கும், பிறகு எழுதுதலுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. படித்தல் திறனில் மாணவர்களுக்கு வாய்விட்டுப் படித்தல், வாய்க்குள் படித்தல் ஆகிய இரண்டு நிலைகளிலும் முறையாகப் பயிற்சியளித்தல் வேண்டும். அடுத்தநிலையாக வாசிப்புப் பழக்கத்தை வளர்க்க மாணவர்களுக்கு அகன்ற படிப்பு (Extensive Reading) முறையையும் அறிமுகப்படுத்த வேண்டும்.

மொழியைத் திறம்படக் கையாளுவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் அடிப்படை இலக்கண அறிவு அவசியம். இலக்கணத்தையும் மொழிக்கூறுகளையும் மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பொருத்தமான சூழலை அமைத்து விளக்க வேண்டும். இயன்றவரை இலக்கணத்தை விதிகளின் அடிப்படையில் கற்பிப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

## 3.2 கருத்துப்பரிமாற்ற அணுகுமுறை

ஒரு மொழியைச் சரியாகவும் சரளமாகவும் சூழ்நிலைக்கு ஏற்பப் பொருத்தமாகவும் பயன்படுத்துவதற்குத் தேவையான தகுந்த கற்றல் அனுபவங்களை மொழிக் கல்வியானது மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

தமிழ்மொழியை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களுக்குத் தமிழில் பிழையறப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் அடிப்படை இலக்கண அறிவு அவசியமே. ஆனால், அந்த அடிப்படை இலக்கணத்தை மட்டும் கற்றறிவது தமிழ்மொழியில் ஒரு மாணவர் பெறக்கூடிய தேர்ச்சியின் அடைவுநிலையாகக் கருதப்படாது. மாணவர்கள், தாம் படித்த தமிழைப் பள்ளியிலும் பள்ளிக்கு வெளியிலும் தன்னம்பிக்கையோடு பயன்படுத்தும்போதுதான் அவர்கள் அதை நன்கு அறிந்துகொண்டதாகக் கருதப்படும். அப்போதுதான், அந்த மொழியைக் கற்றுக்கொண்டதன் முழுப் பயனையும் அம்மாணவர்கள் பெறுகிறார்கள். ஒரு மாணவர் தம் எண்ணங்களையும் கருத்துகளையும்

மற்றவருடன் முறையாகப் பரிமாறிக்கொள்ள மொழி பயன்பட வேண்டும். அவ்வாறு அவர் உணர்வுபூர்வமாகக் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளும் நிலையே அவர் மொழியை நன்கு கற்றுத் தேர்ந்ததற்கு அடையாளமாகும். கருத்துப்பரிமாற்றமானது முதலில் பேச்சுமூலமே வெளிப்படவேண்டும். பேச்சில் திறன் பெற்ற பிறகே, எழுத்தின்வழி ஒருவரால் எளிதில் கருத்துப்பரிமாற்றம் செய்ய இயலும்.

மொழி கற்றலில் ஈடுபடுவோர் அன்றாட வாழ்க்கையில் ஒருவர் மற்றொருவரோடு இயல்பான முறையில் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளும் திறனைப் பெற வேண்டும். மாணவர்களிடம் இத்திறனை வளர்க்கப் பலவிதமான உத்திகளைக் கையாளுதல், அவர்களைப் பயிற்சிகளில் ஈடுபடுத்துதல் ஆகிய செயல்முறைகளே இங்குக் கருத்துப்பரிமாற்ற அணுகுமுறையெனக் கருதப்படுகிறது. வாழ்க்கையோடு தொடர்புடைய வகையில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும்போதுதான் அவர்களால் தங்களின் கருத்துகளைத் தங்குதடையின்றி வெளிப்படுத்த முடிகிறது. மேலும் தமிழ்ப்பாடத்தில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வமும் விருப்பமும் நிலைத்திருப்பதற்கு இந்த அணுகுமுறை பெரிதும் துணைபுரிகிறது.

### கருத்துப்பரிமாற்ற அணுகுமுறை என்பது :

- ஈடுபாடுமிக்க கருத்துப்பரிமாற்றத்தை நிகழச் செய்தல்
- நடைமுறைக்கு ஏற்ற கற்பித்தல் வளங்களை அறிமுகப்படுத்துதல்
- மொழி கற்றலில் உள்ள கற்றல் படிநிலைகளில் கவனம் செலுத்துதல்
- சொந்த அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுதல்
- பள்ளியிலும் பள்ளிக்கு வெளியிலும் மொழியைப் பயன்படுத்தும் சூழலை உருவாக்குதல்

### கருத்துப்பரிமாற்றத் திறன்களின் வெளிப்பாடுகள் என்பன :

- வெவ்வேறு சூழலுக்குப் பொருத்தமாகவும் நிகழ்வுக்கு ஏற்றவாறும் தமிழ்மொழியைப் பயன்படுத்த அறிந்திருத்தல்
- சூழலுக்கும் கேட்போருக்கும் ஏற்றவாறு மொழியைப் பயன்படுத்த அறிந்துகொள்ளுதல்
- வெவ்வேறு பனுவல்களைப் படித்துப் பொருள் உணர்ந்து அவற்றைப் பற்றிய கருத்துகளை வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருத்தல்
- மொழியாற்றலின் அளவிற்கேற்ப மற்றொருவருடன் கருத்துப்பரிமாற்றம் நிகழ்த்த அறிந்திருத்தல்.

### கருத்துப்பரிமாற்ற அணுகுமுறையில் பல்வேறு கற்பித்தல் முறைகள்

கற்கும் மாணவர்களின் இயல்பறிந்து, பாடப்பொருளின் அளவறிந்து கற்பித்தலே சிறந்த பயிற்றுமுறையாகும். மாணவர்கள் கற்க வேண்டியவற்றை அவர்களின் அனுபவ எல்லைக்கு உட்படுத்திக் கற்பிக்கும்பொழுதுதான் அவை மாணவர்களைச் செம்மையான முறையில் சென்றடைகின்றன. அங்குக் கற்போரை மையமாகக் கொண்டே கற்பித்தல் நிகழ்கிறது.

பாடப்பொருளும் மொழி நடையும் அந்தந்த நிலைகளுக்கு ஏற்புடையவையாக அமைய வேண்டும். அவை மாணவர்களால் எளிதில் புரிந்துகொள்ளத்தக்க வகையிலும், மாணவர்களின் வயது முதிர்ச்சி, அறிவு முதிர்ச்சி, மன வளர்ச்சி ஆகியவற்றையொட்டியும் அமைய வேண்டும்.

### இருவழித் தொடர்பு சார்ந்த கற்றல் (Interactive Learning)

கருத்துப்பரிமாற்றமே கருத்துப்பரிமாற்ற அணுகுமுறையின் மையக்கருவாகும். இது கருத்துப் பகிர்வுச் சூழலில் பேசுவோர் கேட்போர் இருவரிடையே நிகழும் மொழித்தொடர்பினை வலியுறுத்துகிறது.

இம்முறையில் இணைவேலை, குழுவேலை முதலியவை வகுப்பறையில் நிறைய இடம்பெறுவது அவசியம். அப்போது, பெரும்பாலும் அன்றாட வாழ்க்கையில் பயன்படும் பேச்சுமொழியே சிந்தனைப் பரிமாற்றத்திற்கும் கருத்துப்பரிமாற்றத்திற்கும் உகந்ததாக அமையும். இதையே மாணவர்களிடம் வலியுறுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.

### மாணவரை மையமாகக்கொண்ட கற்றல் (Learner-centred Learning)

இம்முறையில் கற்பிக்கும்போது தனித்துச் செயற்பட மாணவர்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான், மாணவர்களால் தங்கள் சொந்தப் படைப்பாற்றலை வெளிப்படுத்தவும் தங்களுடைய தேவைகளையும் நோக்கங்களையும் மனத்திற்கொண்டு அதன்படி செயற்படவும் இயலும்.

### கூடிக்கற்றல் (Cooperative Learning)

கூடிக்கற்றல்முறை இணைவேலையையும் குழுவேலையையும் அதிகம் வலியுறுத்துகிறது. இம்முறையின்வழி, மாணவர்கள் கற்கும் பாடம் தொடர்பான செய்திகளைப் பெறுவதற்கு இணையாகவோ குழுவாகவோ செயற்பட்டும் தகவல்களைத் திரட்டியும் பகிர்ந்துகொள்கிறார்கள். இத்தகைய செயற்பாடு, பயன்மிக்க கற்றல் அனுபவங்களாக மாணவர்களுக்கு அமையும்; நினைவிலும் நிலைத்து நிற்கும்.

### செயல் சார்ந்த கற்றல் (Task-based Learning)

உடலும் உள்ளமும் ஒருங்கே செயற்படும்போதுதான் கற்றல் எளிதாகவும் விரைவாகவும் நிகழும். சிந்தனைக்கும் செயலுக்கும் சமமான அளவு முக்கியத்துவம் அளிக்கும் கற்பித்தல்முறை நிறைந்த பயனைத் தரும்.

### சூழமைவு சார்ந்த கற்றல் (Context-based Learning)

பனுவல்கள் பல்வேறு வடிவங்களைச் சார்ந்தவையாக (கதை, நாடகம், கட்டுரை) அமைதல் நன்று. இவை, மாணவர்களின் கற்பனை ஆற்றலை வளர்க்கக்கூடியவையாக அமைதல் சிறப்பு. பல்வேறு வடிவங்களில் இடம்பெறும் பனுவல்கள் பின்வரும் தன்மைகளைக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

- பனுவல்களின் பாடப்பொருள் சிங்கப்பூர் மண்வாசனையுடன் மாணவர்களால் எளிதில் அறிந்துகொள்ளக்கூடியவையாக இருத்தல் அவசியம்.
- பண்பாட்டு நிகழ்ச்சிகளாயினும் வரலாற்று நிகழ்ச்சிகளாயினும் அவற்றைக் கற்பனை நயத்துடன் நம் சமூகத்தின் அனுபவங்களோடு இணைத்துக் காட்ட வேண்டும்.

- பனுவல்களில் இடம்பெறும் சொற்கள் பயன்பாட்டுக்கு உகந்தவையாகவும் கற்போரின் புரிந்துணர்வுக்கு உட்பட்டவையாகவும் இருக்க வேண்டும்.
- பாடப்பொருள் இயன்றவரை இயல்பானதாகவும் நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்.
- பாடப் பனுவல்களோடு இணைத்தே இலக்கணமும் மொழிக்கூறுகளும் கற்பிக்கப்பட வேண்டும்.
- பனுவல்கள் பொருத்தமான மொழிநடையைக் கொண்டவையாக அமைதல் வேண்டும்.

### கருத்துப்பரிமாற்ற அணுகுமுறையில் மொழி கற்றலுக்கு ஏதுவான சூழல்கள்

- உற்சாகமான முறையில் மாணவர்கள் வகுப்பறையில் கருத்துப்பரிமாற்றம் நிகழ்த்தும் சூழலை அமைத்தல்
- குழு நிலையில் பாடப்பொருளைக் கற்க ஏதுவான சூழ்நிலையை அமைத்தல்
- மொழியை அடிப்படையாய்க் கொண்ட பயன்மிக்க கருத்துப்பரிமாற்றச் சூழலை உருவாக்குதல்
- மாணவர்கள் தம் மொழியாற்றல் குறித்துப் பிறரிடம் கருத்தைக் கேட்டுத் தம் மொழித்திறனைத் தொடர்ந்து மேம்படுத்திக்கொள்ள வழிவகுத்தல்
- கருத்தைப் பரிமாறிக்கொள்ளும் வேளையில் ஒரு மாணவர் தம் மொழித்திறத்தை முறையே வெளிப்படுத்தி மேலும் அதனை மேம்படுத்திக்கொள்ள வழிவகுத்தல் (Communicative Competence)
- ஒரு செய்தியை / கருத்தை உணர்வுபூர்வமாக ஏற்ற மொழி வழக்கில் வெளியிட முயலுதல்

### கருத்துப்பரிமாற்ற அணுகுமுறைவழி மொழி கற்றலில் ஆசிரியர் - மாணவர் பங்கு

- கருத்துப்பரிமாற்றத்திற்கான தகுந்த சூழலை ஏற்படுத்திய பின், கூடிக்கற்றல் மொழி நடவடிக்கைகளில் மாணவர்களை இணையாகவோ குழுவாகவோ ஈடுபடுத்தவேண்டும்.
- மாணவர்கள் கற்றலுக்கு முழுமையாக ஆசிரியரையே சார்ந்திருக்கும்படி வகுப்பறைச் சூழல் அமையக்கூடாது. மாறாக, மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து செயற்பட்டு உற்சாகமான முறையில் கருத்துப்பரிமாற்றத்தின்வழிக் கற்றுக்கொள்ளும் சூழலை அமைக்க வேண்டும்.
- சிறந்த கற்றல் மேம்பாட்டுக்குப் பலதரப்பட்ட வகுப்பறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். (எ-டு) தனி நிலையில் இருவர் இருவராக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், குழு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், பாத்திரமேற்று நடித்தல், பணித்திட்ட வேலையில் ஈடுபடுதல்
- இவ்வேளையில் ஆசிரியர் ஒரு கண்காணிப்பாளராகவும் (Monitor) வழிநடத்துநராகவும் (Facilitator) தம்முடைய பணியை மேற்கொள்ள வேண்டும். மாணவரும் சுயகற்றலுக்கு அதிகப் பொறுப்பேற்க வேண்டும்.


## கருத்துப்பரிமாற்றப் பயன்பாடுகள்

வாழ்நாள் முழுதும் ஒருவரது கருத்துப்பரிமாற்றத் திறன் அவருடைய வெற்றிகளுக்கும் சாதனைகளுக்கும் ஒரு முக்கியக் காரணமாக விளங்குகிறது. மனிதன் தன் எண்ணங்கள், கருத்துகள், விருப்பு வெறுப்புகள், உணர்ச்சிகள் முதலானவற்றை வெளிப்படுத்தவும் அவற்றைப் பிறரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் கருத்துப்பரிமாற்றமே அவனுக்குத் துணைபுரிகிறது.

**கருத்துப்பரிமாற்றம் நிகழும் இரு வழிகள்:**

- பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்
- எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

இவ்வழிகளைத் தவிர்த்து, சைகைமொழி, உடல்மொழி, முகபாவனைகள் மூலமாகவும் நாடகம், ஓவியம் முதலான கலைப்படைப்புகளின் மூலமாகவும் கருத்துப்பரிமாற்றம் நிகழும்.




**உணர்வுகளையும் மனப்பான்மைகளையும் வெளிப்படுத்துதல்**

ஒருவர் வெளிப்படுத்தும் கருத்துகளில் அவருடைய உணர்வுகளும் மனப்பான்மைகளும் கலந்திருக்கின்றன. வகுப்பறைகளில் நடைபெறும் கருத்துப்பரிமாற்ற நடவடிக்கைகள், மாணவர்கள் வெவ்வேறு உணர்வுகளையும் மனப்பான்மைகளையும் சூழலுக்குத் தக்கமுறையில் வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும்வகையில் அமைய வேண்டும்.
(எ-டு)

- விருப்பத்தை / விருப்பமின்மையைத் தெரிவித்தல்
- அன்பைத் தெரிவித்தல்
- மகிழ்ச்சியை வெளிப்படுத்துதல்
- அச்சத்தைத் தெரிவித்தல்
- ஐயத்தைத் தெரிவித்தல்
- வெற்றியைப் பாராட்டுதல்
- நன்றி கூறல்
- மன்னிக்க வேண்டுதல்
- ஊக்கப்படுத்துதல், உற்சாகப்படுத்துதல்
- வெறுப்பை, அக்கறையின்மையை / கோபத்தை வெளிப்படுத்துதல்

**தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுதல்**

அன்றாட வாழ்வில் ஒவ்வொருவரும் பல்வேறு தகவல்களைக் கொடுப்பதும் பெறுவதும் இயல்பு. மாணவர்களது மொழித்திறன்கள் யாவும் கருத்துப்பரிமாற்றப் பயன்பாடுகளின்வழிச் செம்மையாக வளர்க்கப்பட்டால் அவர்களது செயல்திறனும் கூடும். சூழலுக்கேற்பத் தகவல்களைத் தான் எண்ணியபடியே பிறரிடம் சேர்ப்பிக்கவும் மற்றவரின் தகவல்களைச் சரியாகப் பெற்றுக்கொள்ளவும் கருத்துப்பரிமாற்றப் பயன்பாடுகள் உதவ வேண்டும். கீழ்க்காணும் சில கருத்துப்பரிமாற்றப் பயன்பாடுகள் மாணவர்கள் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள உதவும்:

- பொருத்தமாகத் தகவல் கேட்டுப் பெறுதலும் தகவல் சொல்லுதலும்
- ஒருவரின் கருத்தை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது மறுத்தல்
- ஒரு நிகழ்ச்சியை, ஒரு பொருளை, ஒரு நபரைப்பற்றி விசாரித்து அறிதல்
- பெற்ற தகவல்களை விளக்கியோ சுருக்கியோ சொல்லுதல்
- ஒருவரது நம்பிக்கை / நோக்கம் / தேவைபற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் அல்லது அது தொடர்பாகத் தம் கருத்தைச் சொல்லுதல்
- ஒரு சம்பவம், பத்திரிகைச் செய்தி தொடர்பாகத் தம் கருத்தைத் தெரிவித்தல்
- படித்த செய்தி, பார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சி, கேட்ட வானொலி நிகழ்ச்சிபற்றிக் கருத்துத் தெரிவித்தல்
- பொது இடங்களில் பார்த்த சம்பவங்களைப் பிறருக்குச் சொல்லுதல்
- அனுமதி கேட்டல் / அனுமதித்தல் / அனுமதி மறுத்தல்
- ஒருவர் கூறுவதில் ஐயம் தெரிவித்தல்
- ஒருவர் கூறுவதை உறுதிப்படுத்துமாறு கேட்டல்
- திரும்பவும் சொல்லுமாறு கேட்டல் / மீண்டும் வேறு விதமாகக் கூறுதல்

**சமூகத்துடனான உறவினை நிலைநாட்டுதல்**

மனிதனை ஒரு சமூகமாக இயங்க வைப்பது கருத்துப்பரிமாற்றமே. மாணவர்கள் குடும்பத்திலும் அதற்கு அப்பாலும் தாங்கள் கொண்டுள்ள உறவினை நிலைநாட்டிக்கொள்ள இக்கருத்துப்பரிமாற்றப் பயன்பாடுகள் கைகொடுக்கும். தாம் வாழும் சமுதாயத்தின் எதிர்பார்ப்புகள், பழக்க வழக்கங்கள் முதலானவற்றுக்கேற்பக் கருத்துப்பரிமாற்றத்தை அமைக்க வேண்டும்.

- ஒருவருக்கு வணக்கம் தெரிவித்தல்
- ஒருவரை வரவேற்றல்
- ஒருவருக்குப் பிரியாவிடை கூறி அனுப்பி வைத்தல்
- ஒருவருக்கு ஆறுதல் சொல்லுதல்
- ஒருவரின் உடல் நலம் குறித்து விசாரித்தல்

மேற்கண்ட செயற்பாடுகளில் ஒருவரின் வயது, நெருக்கம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு அதற்கேற்பத் துலங்குதல்.


இங்குக் கருத்துப்பரிமாற்றப் பயன்பாடுகளின் பட்டியலில் இடம்பெற்றிருப்பவை சில எடுத்துக்காட்டுகளே. கருத்துப்பரிமாற்றத்தின் பயன்பாடுகளைக் கருத்திற்கொண்டு மாணவர்களின் பேசுதல், எழுதுதல் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

## கற்றல், கற்பித்தல் கோட்பாடுகளும் உத்திகளும்

கல்வி அமைச்சாலும் கல்வியாளர்களாலும் அடையாளம் காணப்பட்ட சில அணுகுமுறைகளும் கோட்பாடுகளும் உத்திகளும் இப்பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஈடுபாடுமிக்க கற்றல், கற்பித்தல் செம்மையாக நிகழ இவை உறுதுணையாக அமையும்.

## 3.3 ஈடுபாடுமிக்க கற்றல் கோட்பாடுகள் (Principles of Engaged Learning - PETALS)

'PETALS' எனப்படும் ஈடுபாடுமிக்க கற்றல் கோட்பாடு மாணவர்களை முழுமையாகக் கற்றலில் ஈடுபடுத்த வல்லது. இக்கோட்பாடு மாணவரை மையமாகக்கொண்டு (Student-centred) இயங்குகிறது. இக்கோட்பாட்டின் ஐந்து கூறுகளாவன:




| | | | |
|---|---|---|---|
| **P** - | Use of **P**edagogies | - | கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல் |
| **E** - | **E**xperiences of Learning | - | கற்றல் அனுபவங்கள் |
| **T** - | **T**one of Environment | - | கற்றலுக்கு ஏதுவான சூழல் |
| **A** - | **A**ssessment for Learning | - | கற்றலுக்காக மதிப்பிடுதல் |
| **L** - | **L**earning Content | - | கற்றலுக்கான பாடப்பொருள் |
| **S** - | **S**tudent-centred | - | மாணவரை மையமாகக்கொண்ட கற்பித்தல் |

### கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல்

மாணவர்களின் கற்றல் பாணிகள், அவர்களின் தேவைகள், தயார்நிலை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு கற்பித்தல் அணுகுமுறைகளைத் திட்டமிடுதல்பற்றி இந்தக் கோட்பாடு விளக்குகிறது. ஆசிரியர்கள் மேற்குறித்த கூறுகளைக் கவனத்திற்கொண்டு திட்டமிட்டுச் செயற்படுவதன்வழி மாணவர்களைப் பாடத்தில் முழுமையாக ஈடுபடுத்த முடியும்.

கற்பித்தல் அணுகுமுறைகள் மாணவர்களின் கற்றல் பாணிகளைக் கருத்திற்கொண்டு அமையும்போதுதான் அவர்கள் கற்றலில் ஈடுபாடு காட்டுவார்கள். இதன்வழி, மாணவர்களின் மொழியாற்றலையும் அறிவாற்றலையும் வளர்ப்பதோடு அவர்கள் பெற்றுள்ள கற்றல் அனுபவங்களையும் விரிவடையச் செய்யமுடியும்.

### கற்றல் அனுபவங்கள்

கற்றல் அனுபவங்கள் சிந்தனையை வளர்க்கவும் மேம்படுத்தவும் ஒன்றை மற்றொன்றோடு தொடர்புபடுத்திப் பார்க்கவும் சுயமாகக் கற்கவும் மாணவர்களைத் தூண்டுகின்றன.

### கற்றலுக்கு ஏதுவான சூழல்

மாணவர்களை அச்சுறுத்தாத வகுப்பறைக் கற்றல் சூழல், மாணவர்களின் கற்றலுக்குப் பெரும் துணைபுரியும். இதை உருவாக்கித் தருவதில் ஆசிரியருக்கு மிகப் பெரிய பொறுப்புண்டு. அதற்கு, மாணவர்களோடு சுமூகமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும்.

### கற்றலுக்காக மதிப்பிடுதல்

மாணவர்கள் அவ்வப்போது தங்கள் கற்றல் நிலையை அறிந்துகொள்ளும் விதத்தில் கற்றலுக்கான மதிப்பீட்டுமுறை அமைய வேண்டும். ஆசிரியர், மாணவர்களைத் தொடர்ந்து மதிப்பீடு செய்வதோடு, அவர்களுடைய கற்றல் வளர்ச்சிக்கு உதவும் பயன்மிக்க கருத்துகளை வழங்கி வழிநடத்திச் செல்வதே இக்கோட்பாட்டின் முக்கிய அம்சமாகும்.

### கற்றலுக்கான பாடப்பொருள்

பாடப்பொருள் மாணவர்களின் தேவைக்கேற்பவும் நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்படும் விதத்திலும் அமைய வேண்டும்.

## 3.4 பல்வகை நுண்ணறிவுத் திறன்கள் (MI - Multiple Intelligences)

நம் எல்லோருக்கும் ஒரே மாதிரியான நாட்டம் இருப்பதில்லை. சிலர் இசையை விரும்புவர். சிலர் நடிப்பில் ஈடுபாடு காட்டுவர். சிலர் இயற்கைக் காட்சிகளைப் பெரிதும் ரசிப்பர். சிலர் புத்தகங்கள் படிப்பதில் ஆர்வங்காட்டுவர். இவ்வாறு விருப்பங்களும் நாட்டங்களும் நம்மிடையே வேறுபட்டுக் காணப்படுவதற்குக் காரணம் அந்தந்த நுண்ணறிவுகள் நம்மிடம் மேலோங்கி இருப்பதே ஆகும். எனவே, மாணவர்களிடம் இயற்கையாய் அமைந்திருக்கும் நுண்ணறிவுகளின் அடிப்படையில் வகுப்பறைக் கற்பித்தல் அமையுமானால், கற்றல் கற்பித்தல் நிறைவான பயனைத் தரும். அதோடு, மாணவர்களின் பல்வகை நுண்ணறிவுத் திறன்களும் மேம்படும்.

பாடநூலில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு திறன்களையும் வளர்க்கும் வகையில் பாடப்பகுதிகளும் நடவடிக்கைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் எந்தெந்தப் பகுதி எந்தெந்த நுண்ணறிவைக் கொண்டு கற்பிக்க மிகப்பொருத்தமாக இருக்கும் என்பதை ஆசிரியர் முதலில் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். பிறகு, அதற்கேற்ற வகையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை அமைத்துச் செயற்படுத்த வேண்டும்.

## 3.5 திறனறிந்து கற்பித்தல் அணுகுமுறை (DI - Differentiated Instruction)

ஒவ்வொரு மாணவரின் கல்வித் தேவைகளை நன்கறிந்து அவற்றிற்கு ஏற்றாற்போல் கற்பித்தலை மேற்கொள்வதே திறனறிந்து கற்பித்தல் அணுகுமுறை என்பதாகும். மாணவரின் தேவைக்கேற்பக் கற்பித்தல் நடவடிக்கைகள் அமையப்பெற்றால்தான் நிறைவான கற்றல் கைகூடும். முன்னறிவு, ஆர்வம், மனப்போக்கு ஆகிய பல்வேறு கூறுகளின் அடிப்படையில்தான் ஒரு மாணவரின் கற்றல் அடைவுநிலை நிர்ணயிக்கப்படுகின்றது. இந்தக் கற்றல் அடைவுநிலை மாணவருக்கு மாணவர் வேறுபட்டே இருக்கும். ஒவ்வொரு மாணவருக்கும் தகுந்த முறையில் கல்வி புகட்ட ஆசிரியர் திறனறிந்து கற்பித்தல் அணுகுமுறையை அறிந்திருப்பது இன்றியமையாதது.

**திறனறிந்து கற்பித்தல் அணுகுமுறையின் முக்கியக் கூறுகள் :**

- மாணவர்களின் வெவ்வேறு கற்றல் தேவைகளை உணர்ந்து நிகழ்த்தப்படுகின்ற வகுப்பறைக் கற்பித்தல்
- மாணவர்களுக்கு **எதை**க் கற்பிக்க வேண்டும் (பாட உள்ளடக்கம்); **எப்படி**க் கற்பிக்க வேண்டும் (கற்பித்தல் வழிமுறை); **எவ்வாறு** கற்றல் நிகழ்ந்துள்ளது என்பதை உறுதிப்படுத்துவது (மாணவர்களின் அடைவுநிலை) ஆகிய கூறுகளை மனத்திற்கொண்டு ஆசிரியர் பல்வேறு உத்திகளையும் அணுகுமுறைகளையும் திட்டமிடுதல்
- ஒவ்வொரு மாணவரின் கற்றல் தேவைகளையும் மதித்து அவற்றிற்கு ஏற்றாற்போல் பலவிதமான கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒவ்வொரு மாணவருக்கும் நிறைவான கற்றல் அனுபவங்களைக் கொண்டு சேர்த்தல்

## 3.6 புளூம் கோட்பாடு (Bloom's Taxonomy)

புளூம் கோட்பாடானது கற்பித்தலைத் திட்டமிடுவதற்குப் பயன்படும் ஒரு கருவியாகத் திகழ்கிறது. இது உலகளவில் பயன்பாட்டில் உள்ள ஒரு சிறந்த கோட்பாடாகும். மாணவர்கள் தங்கள் எண்ணத்தில் எழும் மாறுபட்ட சிந்தனைகளைத் தரமாக வெளிப்படுத்த இக்கோட்பாடானது வாய்ப்பளிக்கிறது. அடிப்படை நிலையிலிருந்து உயர் நிலைக்கு இட்டுச் செல்லும் படிநிலைகளாவன :

| | | |
|---|---|---|
| படைத்தல் | (Creating) | உயர்நிலை |
| மதிப்பிடுதல் | (Evaluating) | ↑ |
| பகுத்துணர்தல் | (Analyzing) | |
| பொருத்திப் பார்த்தல் | (Applying) | |
| புரிந்துணர்தல் | (Understanding) | |
| நினைவு கூர்தல் | (Remembering) | அடிப்படை |

## 3.7 கூடிக்கற்றல் உத்திகள் (Cooperative Learning Strategies)

மாணவர்கள் குழுவாக இணைந்து கற்பதற்கும் தத்தம் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் பல்வேறு சூழல்களில் பொருத்தமாகச் செயற்படுவதற்கும் கூடிக்கற்றல் அணுகுமுறை உதவுகிறது; அதுமட்டுமல்லாமல் சமூகத்திறன்களையும் மாணவர்களிடையே வளர்க்கின்றது.

### கூடிக்கற்றலின் அடிப்படைக் கூறுகள் :

- ஒருவர் மற்றொருவரைச் சார்ந்திருப்பதும் உரியமுறையில் பங்களிப்பதும்
- ஒவ்வொருவரும் பொறுப்புணர்ந்து செயற்படுதலும் குழு நிலையில் பொறுப்பு ஏற்றுக்கொள்ளுதலும்
- இணையாளருடனும் குழுவினருடனும் இணங்கிச் செயற்படும் திறன்கள்
- குழுவில் செயற்படும் முறை
- ஆக்கபூர்வமான கலந்துரையாடல்

## 3.8 முனைப்புடனும் சுயமாகவும் கற்கும் உத்திகள் (SAIL - Strategies for Active and Independent Learning)

கற்பவரை மையப்படுத்திய சூழலில், பாடத்திட்ட இலக்குகள், கற்பித்தல், மதிப்பீடு மூன்றையும் இணைத்து வடிவமைக்கப்பட்டதே முனைப்புடனும் சுயமாகவும் கற்கும் உத்திகளாகும்.

### அமைப்புமுறையும் அதன் கூறுகளும்

கற்றல் என்பது ஆக்கமும் வளர்ச்சியும் சார்ந்த செய்முறையாக இருக்க வேண்டும் என்பதை முனைப்புடனும் சுயமாகவும் கற்கும் உத்திகளின் அமைப்புமுறை வலியுறுத்துகிறது. இந்த அமைப்புமுறையில் கற்பித்தலும் மதிப்பிடுதலும் மாணவர்கள் தொடர்ந்து கற்பதும் கற்றலில் முன்னேற்றம் காண்பதும் அடங்கியிருக்கின்றன. மாணவர்கள் அறிந்திருக்க வேண்டியவை, அவர்களால் செய்ய முடிந்தவை, கற்றல் செயல்முறைகளில் மாணவர்களின் நிலை, அவர்கள் தங்களை மேம்படுத்திக்கொள்ளும் வழிகள் ஆகியவற்றுக்கு இடமளிக்கும் வெளிப்படையான விளக்கங்களைக் கொண்டது இம்முறை.

### செயலாக்கப் படிநிலைகள்

- கற்றல் எதிர்பார்ப்புகளைத் தேர்ந்தெடுத்தலும் விளக்குதலும்
- கற்றல் பணிகளைத் தேர்ந்தெடுத்தல்
- வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்ட எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் மாணவர் செயற்பாட்டினை மதிப்பிடுதல்
- சுய மதிப்பீடு மற்றும் சக மாணவர் மதிப்பீட்டுக்கு வாய்ப்பளித்தல்
- மாணவர் தரம்பற்றிக் கருத்துத் தெரிவித்தல்

### துணைபுரியும் கருவிகள்

**கற்றல் எதிர்பார்ப்பு விளக்கங்கள்**: பாடத்திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கற்பித்தல் நோக்கங்கள், கற்றல் விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் எதிர்பார்ப்பு விளக்கங்கள் உருவாக்கப்படுகின்றன. அவை மாணவர்கள் அறிந்திருக்க வேண்டியவை, அவர்களால் செய்ய முடிந்தவை ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய வெளிப்படையான கற்றல் எதிர்பார்ப்பு விளக்கங்களாகும்.

**கற்றல் எதிர்பார்ப்பு விளக்கங்கள் சார்ந்த பணிகள்**: பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அடைவுநிலைகள், அறிவு, திறன்கள், மனப்பான்மைகள் முதலியவற்றை மாணவர்கள் கைவரப்பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கும் நடவடிக்கைகள்தான் கற்றல் எதிர்பார்ப்பு விளக்கம் சார்ந்த பணிகள் ஆகும்.

**மதிப்பீட்டுக் கருவிகள்:** மதிப்பீட்டு வழிகாட்டிகள், சரிபார்ப்புப் பட்டியல், கண்காணிப்புத்தாள் போன்றவை சில மதிப்பீட்டுக் கருவிகளாகும். இவை மதிப்பீட்டுப் பரப்புகளைத் தெளிவுபடுத்துகின்றன. மாணவர்களின் அடைவுநிலையைக் கணித்தறிய உதவுகின்றன.

**மாணவரின் மாதிரி வேலைகள்:** வெவ்வேறு செயல்திறனுக்குரிய தகுதிநிலைகளைத் தெளிவாக விளக்குவதற்கும் தரமான செயல்திறன் எது என்பதைக் காட்டவும் மாணவரின் மாதிரி வேலைகள் உதவுகின்றன.

## 3.9 கருப்பொருள்கள்

கேட்பதும், பேசுவதும், படிப்பதும், எழுதுவதும் ஒரு குறிப்பிட்ட சூழலைச் சார்ந்தே நிகழும். அதனாலேயே, இந்தத் திறன்களை மாணவர்கள் கைவரப் பெறுவதற்கு ஏற்ற கற்றல் சூழல்களை வழங்கும் வகையில் கருப்பொருள்களும் துணைக்கருப்பொருள்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளனவே தவிர, பாடத்தலைப்புகளில் முழுமையான அறிவு பெறவேண்டும் என்பதற்காக அல்ல. எனவே, இங்குத் தரப்பட்டுள்ள கருப்பொருள்கள், துணைக்கருப்பொருள்கள் தொடர்பாக அளவுக்கு அதிகமான செய்திகளைக் கற்றுக்கொடுக்கும் போக்குத் தவிர்க்கப்பட வேண்டும்.

தொடக்கநிலை 1, 2 வகுப்புகளில் எழுத்து அறிமுகத்துக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. இதனைக் கருப்பொருள் அடிப்படையில் அமைப்பது, சொல் அறிமுகத்தையும் அதற்கான சூழலையும் கட்டுப்படுத்துவதாகும். ஆகையால், தொடக்கநிலை ஒன்றாம், இரண்டாம் வகுப்புகளில் பாடங்கள் கருப்பொருள் அடிப்படையில் அமையா. தொடக்கநிலை மூன்றாம் வகுப்புமுதல் ஆறாம் வகுப்புவரை கருப்பொருள் அடிப்படையில் பாடங்கள் அமையப்பெறும்.

தமிழ் கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற சூழலை வழங்குவதற்குப் பின்வரும் ஐந்து கருப்பொருள்களும் அவற்றையொட்டிய துணைக்கருப்பொருள்களும் தரப்பட்டுள்ளன.

| கருப்பொருள்கள் | துணைக்கருப்பொருள்கள் |
|---|---|
| **உறவுகள்** | • தான்<br>• குடும்பம்<br>• பள்ளி<br>• நண்பர்கள்<br>• கொண்டாட்டங்கள்<br>• பண்புகள் |
| **சமூகமும் நாடும்** | • அக்கம்பக்கம்<br>• பொது இடங்கள் / பொழுதுபோக்கு வசதிகள்<br>• பல சமய விழாக்கள்<br>• நாட்டு நலன்<br>• தேசிய நிகழ்வுகள் / வரலாற்று நிகழ்வுகள்<br>• தற்காப்பு |
| **உலகமும் நாமும்** | • அண்டை நாடுகள்<br>• வட்டார நிகழ்வுகள்<br>• உலகப்புகழ் பெற்றவர்கள் / சாதனையாளர்கள்<br>• சுற்றுச்சூழல்<br>• சுற்றுலா இடங்கள் |
| **மரபும் பண்பாடும்** | • விழாக்கள்<br>• பாரம்பரிய மரபுகள் / கலைகள்<br>• நீதிக் கதைகள் / நாட்டுப்புறக் கதைகள்<br>• பண்பாட்டு நெறிகள்<br>• அரசர்கள் / புலவர்கள் / கவிஞர்கள் |
| **கற்பனை உலகம்** | • புதிர் வகைகள்<br>• வேற்றுலகம்<br>• விநோதச் சம்பவங்கள் / உயிரினங்கள்<br>• கற்பனைப் பயணங்களும் அனுபவங்களும்<br>• கனவுவழி அனுபவங்கள்<br>• தேவதைக் கதைகள் / மாய மந்திரக் கதைகள்<br>• புனைகதைகள் / மாற்றுருவாக்கக் கதைகள் |

## 3.10 மதிப்பீடு

### மதிப்பீடு - ஒரு கண்ணோட்டம்

மதிப்பீடு, கற்றல் கற்பித்தலில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் விளைவுகள் எந்த அளவுக்கு நிறைவேறியுள்ளன என்பதை ஆசிரியர்கள் அறிந்துகொள்ள இது உதவும். அதேவேளையில் மாணவர்களின் அடைவுநிலைகளை மாணவர்களும் ஆசிரியர்களும் அறிந்துகொள்ளவும் மதிப்பீடு வழிவகுக்கும். இதன்வழி கற்றல் கற்பித்தல் உத்திகளை மேம்படுத்திக்கொள்ளவும் மதிப்பீடு உறுதுணையாக அமைகிறது.

மாணவர்கள் எந்த அளவு கற்றுள்ளனர் என்பதைக் கண்டறிந்து அவர்களைத் தரப்படுத்துவதும் அவர்கள் எந்தெந்தத் திறன்களிலும் கூறுகளிலும் சிறந்து விளங்குகின்றனர் என்பதை அறிந்து அதற்கேற்ப அவர்களை வகைப்படுத்துவதுமே இவ்வளவு காலமாக மதிப்பீட்டின் முக்கிய நோக்கங்களாகக் கல்வியாளர்களால் கருதப்பட்டன. இச்சிந்தனை சற்று மாறிக் கற்றலை மதிப்பிடுதல் (Assessment of Learning), கற்றலுக்காக மதிப்பிடுதல் (Assessment for Learning) என்னும் அடிப்படையில் இன்று மதிப்பீடு அணுகப்படுகிறது.

### மதிப்பீட்டுக் கோட்பாடுகள்

கற்றல் விளைவுகளையும் மாணவர்களின் அடைவுநிலைகளையும் கணித்தறியும் மதிப்பீடு ஏற்புடையதாகவும் நம்பகத்தன்மை மிக்கதாகவும் அமைதல் வேண்டும். முறை சார்ந்த மதிப்பீட்டில் கடினத்தன்மை ஒரே சீராக இருப்பதை உறுதிசெய்வது அவசியம்.

மதிப்பீடுகள் பலவகையான முறைகளையும் நடவடிக்கைகளையும் கொண்டதாய் இருந்தால் மாணவர்கள் பல்வேறு கற்றல் முறைகளைப் பின்பற்றித் தங்கள் திறன்களை மேம்படுத்திக்கொள்ள முடியும். மேலும் மாணவர்கள் தாம் கற்றுக்கொண்டவற்றை வெளிப்படுத்தத் தொடர் மதிப்பீடுகள் வாய்ப்பு அளிக்கும்.

மதிப்பீடுகள் சமநிலையில் இருத்தல் வேண்டும். தொடக்கநிலை ஒன்றாம் இரண்டாம் வகுப்புகளில் முறைசாரா மதிப்பீட்டு முறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுதல் வேண்டும். மதிப்பீடுகள் வெளிப்படையானவையாகவும் தெளிவான நோக்கங்களைக் கொண்டவையாகவும் இருத்தல் வேண்டும். மதிப்பீடுகளின் எதிர்பார்ப்புகள், அவற்றின் உட்பிரிவுகள் போன்ற விவரங்கள் மாணவர்களும் பெற்றோர்களும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையாகவும் தெளிவாகவும் அமைதல் வேண்டும். மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் திறன்கள், அவை அளவிடப்படும் முறை போன்றவை தெளிவாக வரையறுக்கப்படும்போது மதிப்பீட்டின் நோக்கங்கள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

### மதிப்பீட்டின் நோக்கங்கள்

- மாணவர்களின் தேவைகளைக் கண்டறிதல்
- மாணவர்களின் தேவைக்கேற்ப ஆசிரியர்கள் கற்பித்தல் முறைகளை வேறுபடுத்துதல்; மாற்றி அமைத்தல்
- மாணவர்களின் திறமைகளை வளர்த்தல்; குறைகளைக் களைதல்
- மாணவர்களின் வளர்ச்சி நிலையைப்பற்றி மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் தக்க நேரத்தில் தெரிவித்தல்

- மாணவர்களின் தகுதிக்கேற்ப அவர்களை மேல் வகுப்புக்கோ ஏற்ற மொழிப்பிரிவுக்கோ தெரிவு செய்வதை உறுதி செய்தல்
- மொழி கற்றலில் எதிர்பார்க்கப்படும் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களோடு சிந்தனைத்திறனிலும் மாணவர்களின் அடைவுநிலைகளை அறிந்துகொள்ளுதல்
- கற்றலை மதிப்பிடுவதன்வழி மாணவர்களைக் கல்வித்தரத்திற்கு ஏற்பப் பிரித்தல்
- கற்றலுக்காக மதிப்பிடுவதன்வழிக் கற்றல் கற்பித்தல் முறையை மதிப்பிட்டு அறிந்துகொள்ளுதல் / மேம்படுத்திக்கொள்ளுதல்
- கற்றலுக்காக மதிப்பிடுவதன்வழி மாணவர்கள் தங்களை மேலும் மேம்படுத்திக் கொள்ளச் செய்தல்

கற்பித்தல் திட்டம், கற்றல் விளைவுகள், பள்ளித் தேவைகள் ஆகியவற்றைக் கருதிப் பார்த்து மதிப்பீட்டைத் திட்டமிடுதல் வேண்டும். நன்கு திட்டமிடப்பட்ட மதிப்பீட்டுமுறை மாணவர்களின் ஒட்டு மொத்த அடைவுத்திறனை அளந்தறிய வகைசெய்யும்.

மாணவர்களின் திறன்களையும் கற்றல் விளைவுகளையும் அளந்தறிய நடத்தப்படும் மதிப்பீடு இரு வகைப்படும். அவையாவன:

1. முறைசாரா மதிப்பீடு
2. முறைசார்ந்த மதிப்பீடு

இவ்விருவகை மதிப்பீடுகளும் வெவ்வேறு நோக்கங்களுக்காக நடத்தப்படுகின்றன.

### முறைசாரா மதிப்பீடு (Formative Assessment)

முறைசாரா மதிப்பீடு என்பது மாணவர்களின் கற்றல் திறனையும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனையும் உத்திகளையும் மேம்படுத்துவதாக அமைய வேண்டும். மேலும், அந்தந்த நிலைக்குரிய கற்றல் விளைவுகளை அடைய வழிவகுக்கும் ஒன்றாகவும் அமைய வேண்டும். எனவே, மாணவர்களைத் தர வரிசைப்படுத்துவதும் கற்றலைச் சோதிப்பதும் மட்டுமே முறைசாரா மதிப்பீட்டின் நோக்கமல்ல என்பதை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

மொழி கற்றல் கற்பித்தல் என்பது கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என்னும் மொழித் திறன்கள் நான்கினோடு சிந்தித்தல் திறனும் ஒருங்கிணைந்து நிகழும் ஒரு செயல் எனலாம். மொழி கருத்துப்பரிமாற்றத்துக்குரிய ஒரு கருவி என்பதை நாம் அறிவோம். கருத்துப்பரிமாற்றம் பல வழிகளில் நிகழ்கின்றபோதும் பெரும்பாலும் வாய்மொழிக் கருத்துப்பரிமாற்றம், எழுத்துக் கருத்துப்பரிமாற்றம் என இரண்டு முக்கிய வழிகளிலேயே நிகழ்கிறது எனலாம்.

கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு திறன்களையும் மதிப்பிடுவதற்கான தெளிவான வழிகாட்டிக் குறிப்புகளும் விளக்கக் குறிப்புகளும் கொண்ட கையேடு ஒன்று ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். தம்மிடம் பயிலும் மாணவர்களின் திறனுக்கேற்ப மதிப்பிடுவதற்கான தெளிவான வழிகாட்டிக் குறிப்புகளையும் விளக்கக் குறிப்புகளையும்

கொண்ட கையேடுகளை ஆசிரியர்கள் தாங்களாகவே தயாரித்துக்கொள்ள வேண்டும். இவற்றைக்கொண்டு மாணவர்கள் தம்மைத் தாமேயும் ஒருவரை மற்றொருவரையும் அதாவது இணை அடிப்படையிலும், குழு அடிப்படையிலும் சோதிக்க வழிகாட்டியாகக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களும் மாணவர்களை மதிப்பிட இவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தொடர் மதிப்பீடு கற்றலுக்கான மதிப்பீடாக அமையும்போது மதிப்பீட்டு முறையானது நியாயமானதாகவும் ஏற்புடையதாகவும் நம்பகத்தன்மை உடையதாகவும் ஆக்ககரமானதாகவும் சமநிலை உடையதாகவும் கற்றலையும் கற்பித்தலையும் மேம்படுத்துவதாகவும் அமைவதை உறுதி செய்ய வேண்டும்.

### முறைசாரா மதிப்பீட்டு முறைகள்

**(எடுத்துக்காட்டுகள்)**

➢ **மரபுமுறையில் அமையும் எழுத்துத் தேர்வுகள் (Traditional Paper - Pencil Tasks)**

- கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல்
- வாக்கியம் அமைத்தல்
- தனிப்படம், படத்தொடர், கதைத் தொடக்கம் முதலியவற்றைக் கொண்டு எழுதுதல்
- தலைப்பைக் கொண்டு கட்டுரை எழுதுதல்
- முன்னுணர்வுக் கருத்தறிதல்
- சுயவிடைக் கருத்தறிதல்
- மொழிக்கூறுகளையும் செய்யுள்களையும் வாக்கிய அமைப்புகளையும் சோதிக்கும் மற்றப் பயிற்சிகள்

➢ **செயல்திறன் கோப்பு முறை (Portfolio Assessment)**

- மாணவர்கள் தனி, இணை, குழு நிலையிலும் ஆசிரியர் நிலையிலும் மதிப்பிடும் பட்டியல்
- மதிப்பீட்டு விளக்கக் குறிப்புகள் (Rubrics)
- படைப்பாக்கங்கள், மாதிரி எழுத்துப் படிவங்கள், ஒலி / ஒளி வட்டுகள்
- முன்வரைவுகள் / இறுதி வரைவுகள்
- மாணவர்களின் / ஆசிரியர்களின் கருத்துப் படிவங்கள்

➢ **செயல்முறை நடவடிக்கைகள் (Performance Tasks)**

- நால்வகைத் திறன்களோடு சிந்தனைத்திறனையும் மதிப்பிடுவதாக அமைதல்
- தனி நிலையிலும் இணை நிலையிலும் குழு நிலையிலும் மதிப்பிடுவதாக அமைதல்

- மதிப்பீட்டு விளக்கக் குறிப்புகளை முன்னரே வழங்குதல்
- மாணவர்களுடன் கலந்து பேசி மதிப்பீட்டு விளக்கக் குறிப்புகளை உருவாக்குதல்
- குறிப்பாகக் கற்றல் அடைவுகளைச் சோதிப்பதாக அமைதல்
- மதிப்பிடும்போது மாணவர்களின் ஆர்வத்தையும் வேறுபட்ட திறன்களையும் கவனத்தில் கொள்ளுதல்

## முறைசார்ந்த மதிப்பீடு **(Summative Assessment )**

**முறைசார்ந்த மதிப்பீட்டை நடத்த ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டியவை:**

➢ **தேர்வு விவர அட்டவணையைத் தயாரித்தல்**

- சோதிக்கப்பட வேண்டியவற்றை அடையாளம் காணுதல்
- பல்வேறு மொழித்திறன்களையும் சோதிக்கும் வண்ணம் தேர்வுத்தாள் இருப்பதை உறுதிப்படுத்துதல்
- தேர்வுத்தாளின் ஒவ்வொரு பகுதியின் கடினத் தன்மையையும் நிர்ணயித்தல்
- ஒவ்வொரு பகுதிக்கும் உரிய மதிப்பெண்களை, விழுக்காட்டை முடிவு செய்தல்
- தேர்வுத்தாளின் அமைப்பு முறையை முடிவு செய்தல்

➢ **தேர்வுத்தாளைத் தயாரித்தல்**

- ஏற்புடைமை
- நம்பகத்தன்மை
- சமநிலையுடைமை
- சார்புடைமை இல்லாமை
- நிர்வகிக்கக்கூடியதாக இருத்தல்
- வெளிப்படைத் தன்மை

➢ **தேர்வுத்தாளைச் சரிபார்த்தல் (Vetting)**

- கற்றல் விளைவுகளைச் சோதிக்கும் வண்ணம் கேள்விகள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துதல்
- கேட்கப்பட்டுள்ள கேள்விகள் பொருத்தமானவையா என்பதைச் சரிபார்த்தல்
- மாணவர்களின் தரத்திற்கு ஏற்பத் தேர்வுத்தாளின் கடினத்தன்மை உள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல்
- கொடுக்கப்படும் குறிப்புகள் (instructions) தெளிவாக உள்ளனவா என்பதைச் சரிபார்த்தல்

- தயாரிக்கப்பட்டுள்ள விடைத்தாள் கேள்விகளுக்கு ஏற்றதாக இருக்கிறதா என்பதைச் சரிபார்த்தல்
- வினாக்கள் மாணவர்கள் புரிந்துகொள்ளும் திறனுக்கு உட்பட்டதாக உள்ளனவா என்பதை உறுதிசெய்தல்

➢ **தேர்வை நடத்துதல்**

- தேர்வு அட்டவணை
- தேவையான நேரம் கொடுக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்தல்
- தேர்வு அதிகாரிகளிடம் அவர்களின் பணியை விளக்கப்படுத்துதல்
- தேர்வுத்தாளின் ரகசியத் தன்மையைக் கட்டிக்காத்தல்

➢ **தேர்வுத்தாளைத் திருத்துதல்**

- மதிப்பீட்டுக் குறிப்புகள்
- பொது மதிப்பீட்டுக் குறிப்புகள் (generic mark scheme)
- சிறப்பு மதிப்பீட்டுக் குறிப்புகள் (specific mark scheme)
- தர அளவைத் தாள்கள் (benchmark scripts)
- தரப்படுத்துதல் / தரநிர்ணயம் செய்தல் (standardisation)
- தரச்சீர்மைப்படுத்துதல் (moderation)

# இயல் 4

# அடிப்படைத்தமிழ்ப் பாடத்திட்டம்

# இயல் 4 : அடிப்படைத்தமிழ்ப் பாடத்திட்டம்

அடிப்படைத்தமிழ் பயிலும் மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது கேட்டல், பேசுதல் திறன்களுக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். படித்தல் திறனும் எழுதுதல் திறனும் பயன்பாட்டு நோக்கில் மாணவர்களின் மொழியாற்றலுக்கேற்பத் தேவையான அளவே வலியுறுத்தப்பட வேண்டும்.

## 4.1 நோக்கங்கள்

- தமிழில் பிறர் பேசுவதைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்
- பலதரப்பட்ட பேச்சுப் பனுவல்களை (spoken texts) கேட்டுணரும் திறன் பெறுதல்
- தமிழ் அறிந்தோரிடையே பள்ளியிலும், பள்ளிக்கு வெளியிலும் தமது எண்ணங்களை வாய்மொழி வாயிலாகத் தெளிவாகவும் சூழ்நிலைக்கு ஏற்பப் பொருத்தமாகவும் பரிமாறிக் கொள்ளுதல்
- பேசும்போது தங்குதடையின்றிச் சரளமாகப் பேசுதல்
- தமிழில் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல்
- சிந்திக்கும் திறனை வளர்த்தல்
- மரபுவழிப் பண்புகளையும் நாட்டின் பொது நன்னெறிப் பண்புகளையும் அறிந்து கொள்ளுதல்

## 4.2 கற்றல் விளைவுகள்

தொடக்கநிலை ஆறாம் வகுப்பு இறுதியில், மாணவர்கள் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களில் பெற்றிருக்க வேண்டிய கற்றல் விளைவுகள் இங்குத் தரப்பட்டுள்ளன. இவற்றில் தொடக்கநிலை ஐந்தாம் வகுப்பிலும் ஆறாம் வகுப்பிலும் மாணவர்களின் அடைவுநிலைகளை ஆசிரியர்கள் ஆண்டுத் தொடக்கத்திலேயே கூடிக் கலந்துபேசி வரையறுத்துக் கொண்டு வேலைத்திட்டத்தைத் தயாரித்துப் பயன்படுத்துதல் வேண்டும். இது எதிர்பார்க்கும் இலக்கை அடைவதற்கு உறுதுணையாய் அமையும். மொத்தப் பாடத்திட்ட நேரத்தில் 10%முதல் 15%வரை நேரமே எழுதுதல் திறனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## கேட்டல்

**கேட்டல் சூழல்கள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கலாம் :**

- கதைகள், நாடகங்கள், உரையாடல்கள், பாடல்கள் முதலியவற்றைக் கேட்டல்
- எளிய தெளிவான கட்டளைகள், செய்முறைக் குறிப்புகள், வழிகாட்டுதல்கள் முதலியவற்றைக் கேட்டல்
- செய்திக்குறிப்புகள், அறிவிப்புகள், விளம்பரங்கள் முதலியவற்றைக் கேட்டல்
- வயதிற்கும் அனுவத்திற்கும் உகந்த வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கேட்டல் / பார்த்தல்

## பேசுதல்

**பேச்சுச் சூழல்கள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கலாம் :**

- வகுப்பு, குழுக் கலந்துரையாடல்களில் பங்கேற்றுப் பேசுதல்
- தொலைபேசி உரையாடல்கள், செய்தி தெரிவித்தல், கட்டளையிடுதல்
- வழிகாட்டுதல், செய்முறைகளை விளக்குதல்
- நண்பர்களுடன் உரையாடுதல்
- கதை சொல்லுதல்
- தான் கண்ட நிகழ்ச்சியை / காட்சியை விவரித்தல்
- பாவனை நடிப்பு
- சிறிய நாடகங்களில் பங்கேற்றல்
- தலைப்பையொட்டிப் பேசுதல்
- சமூக உரையாடல்கள் (social interactions)
- எளிய தலைப்புகளையொட்டி அமைந்த விவாதப் போட்டிகள்
- பாட்டுப் போட்டி / செய்யுள் மனனப் போட்டி

**இந்தப் பேச்சுச் சூழல்களில் மாணவர்கள், பொருத்தமாகவும் அறிவுக்கு உகந்த முறையிலும் கீழ்க்காணுமாறு பங்கேற்கும் திறன் பெற்றுத் திகழ்வர் :**

- பேச்சுச் சூழலுக்கு ஏற்பப் பொருத்தமான தமிழில் (பேச்சுத்தமிழ் அல்லது எழுத்துத்தமிழ்) பேசுதல்
- பொருத்தமான தொனியைப் பயன்படுத்திப் பேசுதல்
- பிறர் கருத்தைக் கேட்டுணர்ந்து தக்க தருணம்வரை காத்திருந்து பேசுதல்
- உரைநடைப் பகுதியை உணர்ச்சி பாவத்துடனும் தகுந்த இடங்களில் நிறுத்தியும் சரியான உச்சரிப்புடனும் சொல்லழுத்தத்துடனும் பொருத்தமான தொனியுடனும் வாய்விட்டுப் படித்தல்

### படித்தல்

- முக்கியமான விவரங்களை அடையாளம் கண்டு கூறுதல்
- கேட்கப்படும் கேள்விகளுக்கு விடை கண்டு கூறுதல்
- படித்த பகுதியில் கூறப்பட்டுள்ள கருத்துகளையொட்டித் தமது கருத்தினைக் கூறுதல்

**மாணவர்கள் படிக்கும் பனுவல்களுள் பின்வருவன அடங்கலாம் :**

- சிறுவர்களுக்கான சிறுகதைகள்
- சிறுவர்களுக்கான பாடல்கள், கதைப் பாடல்கள்
- எளிய விளம்பரங்கள், சுவரொட்டிகள், அறிவிப்புகள்
- நாளிதழ்களில் வரும் நிகழ்ச்சிகள், சம்பவங்கள் முதலான செய்திகள்
- எளிய வழிகாட்டிக் குறிப்புகள், எளிய கட்டளைக் குறிப்புகள்

### எழுதுதல்

- நண்பர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தல்
- எளிய செய்திகள், கட்டளைகள் எழுதுதல்

## 4.3 மொழித்திறன்கள்

### கேட்டல்

**மாணவர்கள் பின்வருவனவற்றில் திறன் பெற்றிருத்தல் வேண்டும் :**

- எளிய கட்டளைகள், வழிகாட்டுதல்கள், செய்திகள், எளிய செய்முறைகள், வேண்டுகோள்கள் முதலானவற்றைக் கேட்டுச் சரியாகப் புரிந்துகொள்ளுதல்
- குழு நடவடிக்கைகளின்போது, மற்றவர்கள் கூறுவதைச் செவிமடுத்துத் தக்கவாறு பங்கேற்றல்
- விடுகதைகள், புதிர்கள் முதலானவற்றைக் கேட்டுப் புரிந்துகொண்டு அவற்றுக்கான விடைகளை ஊகித்துக் கூறுதல்
- வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றில் இடம்பெறும், மாணவர்களுக்கு உகந்த நிகழ்ச்சிகளைக் கேட்டும் கண்டும் இன்புறுதல்
- பலவகையான பேச்சுப் பனுவல்களைக் கேட்டு அவற்றில் அடங்கியுள்ள முக்கிய விவரங்களைத் தெரிந்துகொள்ளுதல்

### பேசுதல்

**மாணவர்கள் பின்வருவனவற்றில் திறன் பெற்றிருத்தல் வேண்டும் :**

- மக்கள் பற்றியும், இடங்கள், பொருள்கள், நிகழ்ச்சிகள் முதலியவற்றைப் பற்றியும், ஏதேனும் ஒன்றைப் பற்றிய தமது விருப்பு வெறுப்புகள் பற்றியும் மற்றவர்கள் முன்னிலையில் பேசுதல்
- எளிய கட்டளைகள் இடுதல், வழிகாட்டுதல், செய்தி தெரிவித்தல், எளிய செய்முறைகளை விளக்குதல், வேண்டுகோள் விடுத்தல் முதலியவற்றைப்பற்றிப் பேச அறிதல்
- மற்றவர்களுடைய உணர்ச்சிகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் மதிப்பளித்து உரையாடுதல்
- தாம் செவிமடுத்த பனுவல்களில் இடம்பெற்றுள்ள கருத்துகள்பற்றி உரையாடுதல்

### படித்தல்

**மாணவர்கள் பின்வருவனவற்றில் திறன் பெற்றிருத்தல் வேண்டும் :**

- செய்தித்தாளில் வெளிவரும் மாணவர்களுக்கான கட்டுரைகள், நிகழ்ச்சிகள், சம்பவங்கள் பற்றிய செய்திகள் முதலியவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளுதல்
- குழந்தைகளுக்கான கதைகள், பாடல்கள், எளிய கதைப் பாடல்கள் முதலியவற்றைப் படித்து மகிழ்தல்
- பனுவல் உணர்த்தும் பண்பாட்டுக் கூறுகளை அறிந்து போற்றுதல்

### எழுதுதல்

**மாணவர்கள் பின்வருவனவற்றில் திறன் பெற்றிருத்தல் வேண்டும் :**

- எழுத்துகளை வடிவம் சிதையாமல் தெளிவாக எழுதுதல்
- எளிய செய்திகள், கட்டளைகள் முதலியவற்றை எழுதுதல்
- படித்த பனுவலையொட்டிக் கேட்கப்படும் எளிய கேள்விகளுக்குப் பதில் எழுதுதல்
- படித்த புதிய சொற்களை வாக்கியங்களில் அமைத்தல்

## 4.4 கருப்பொருள்கள்

- உறவுகள்
- சமூகமும் நாடும்
- உலகமும் நாமும்
- மரபும் பண்பாடும்
- கற்பனை உலகம்

## 4.5 நடவடிக்கைகள்

- வானொலி / தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கேட்டல் / பார்த்தல்
- தொலைபேசி உரையாடல்கள்
- விடுகதைகள் / புதிர்கள்
- பேச்சுத்தமிழ் - பல்வேறு பயன்பாட்டுச் சூழல்களில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட உரையாடல்களைக் கேட்டல்
- கட்டளைக் குறிப்புகளைக் கேட்டு மாணவர்கள் விளங்கிக் கொள்ளுதல்
- உச்சரிப்புப் பயிற்சி
- பல்வேறு நாபிறழ் பயிற்சிகள் அளித்தல்
- வாய்விட்டுப் படித்தல்
- விளக்கப்படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள் முதலியவற்றில் அடங்கியுள்ள விவரங்களை அறிந்துகொள்ளுதல்
- படங்களில் உள்ள விவரங்களை விளக்கிப் பேசுதல்
- தொடர் உரையாடல் (conversational chains)
- கருத்துத் தெரிவித்தல்
- பாவனை நடிப்பு
- கருத்துதிர்ப்பு (brainstorm)
- கேட்ட / படித்த கதையின் சுருக்கம் கூறுதல் (summary)
- ஒரு பொருளின் நன்மை, தீமை, கவரும் தன்மை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு முடிவெடுத்தல்

# பின்னிணைப்பு

**தொடக்கப்பள்ளிகளுக்கான தகவல் தொடர்புத் தொழில்நுட்பச் செயல்திறன் அட்டவணை**

**மொழி கற்றலில், தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் கீழ்க்காணும் மூன்று முக்கிய நிலைகளில் பயன்படுகின்றது :**

- தகவல் அறிவு பெறுதல்
- தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தும் திறன் பெறுதல்
- தயாரித்தல்

**தொடக்கப்பள்ளியின் இறுதியில் மாணவர்கள் :**

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின்வழித் தேவையான தகவல்களையும் கருத்துகளையும் திரட்டவும், ஒழுங்குபடுத்தவும் பொருத்தமான மின்னிலக்க வளங்களைப் பயன்படுத்தவும் அறிந்திருப்பார்கள்
- பெறப்பட்ட தகவல்களையும் கருத்துகளையும் ஒழுங்குபடுத்தி முறையே பகிர்ந்துகொள்ளவும் படைக்கவும் அறிந்திருப்பார்கள்.

| **தகவல் அறிவு பெறுதல்**<br>**INFORMATION LITERACY** | | |
|---|---|---|
| **தொடக்கநிலை 1 & 2** | **தொடக்கநிலை 3 & 4** | **தொடக்கநிலை 5 & 6** |
| **திறன்:**<br>பல்வேறு மின்னிலக்கப் பயிற்று வளங்களை (digital resources & learning resources) குறிப்பிட்ட மூலங்களிலிருந்து (specified sources) பெற்றுப் பயன்படுத்த அறிந்திருப்பார்கள்.<br>எ.டு:<br>• மாணவர்கள் பாடல் / உரையாடல் முதலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தேவையான மின்னிலக்க வளங்களைப் பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுப் பயன்படுத்த அறிந்திருப்பார்கள். | **திறன்:**<br>தேடுபொறியை (search engine) பயன்படுத்த அறிந்திருப்பார்கள். | **திறன்:**<br>• கொடுக்கப்பட்டுள்ள மீத்தொடுப்பு (hyperlink) வழியாக இணையத்திலிருக்கும் வளங்களைப் பெற அறிந்திருப்பார்கள்.<br>• முக்கியச் சொற்களை (keywords) கொண்டு குறிப்பிட்ட ஒன்றைப் பல்வேறு தேடுபொறிகளின்வழித் தேட அறிந்திருப்பார்கள். |

| தகவல் அறிவு பெறுதல்<br>**INFORMATION LITERACY** | | |
|---|---|---|
| **தொடக்கநிலை 1 & 2** | **தொடக்கநிலை 3 & 4** | **தொடக்கநிலை 5 & 6** |
| • கேட்டல் திறனை மேம்படுத்திக்கொள்ள ஒலிப் பகுதிகளை (audio clips) பயன்படுத்த அறிந்திருப்பார்கள். | | |
| **திறன்:**<br>வரைகலைப் பயனர் இடைமுகத்தை [Graphical User Interface(GUI)] வழிசெலுத்த (navigate) அறிந்திருப்பார்கள்.<br>• மொழி விளையாட்டுகள் போன்ற மின்னூடக நடவடிக்கைகளில் (digital interactive activities) ஈடுபட அறிந்திருப்பார்கள்.<br>• மின்னூடகக் கதைகள் (digital stories), பாடல்கள் அவற்றையொட்டி அமைந்த மற்ற நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பார்வையிடவும் பயன்படுத்தவும் அறிந்திருப்பார்கள்.<br><br>பல்வேறு கணினிவட்டுகளைப் பயன்படுத்த அறிந்திருப்பார்கள்.<br>(எ.டு): 'அரும்புக்கு விருந்து' போன்ற கணினிவட்டுகளைத் திறக்கவும் இயக்கவும் மூடவும் அறிந்திருப்பார்கள். | **திறன்:**<br>வரைகலைப் பயனர் இடைமுகத்தை [Graphical User Interface(GUI)] வழிசெலுத்த (navigate) அறிந்திருப்பார்கள்.<br>• கதை அல்லது பாடல் ஒளிக்காட்சிகளைப் பார்வையிட அறிந்திருப்பார்கள்.<br><br>பல்வேறு பயன்பாட்டு மென்பொருள்களை (application software) செயற்படுத்திக் கோப்புகளை (Folder Files) பயன்படுத்த அறிந்திருப்பார்கள்.<br>(எ.டு): கோப்புகளை முறையாகத் திறத்தல், மூடுதல், செய்த வேலைகளைச் சேமித்தல், அச்சிடுதல் ஆகியவற்றைச் செய்ய அறிந்திருப்பார்கள். | **திறன்:**<br>வரைகலைப் பயனர் இடைமுகத்தை [Graphical User Interface(GUI)] வழிசெலுத்த (navigate) அறிந்திருப்பார்கள்.<br>• கதை அல்லது பாடல் ஒளிக்காட்சிகளைப் பார்த்த பிறகு அதோடு தொடர்புடைய மற்ற எழுதுதல் அல்லது உரையாடல் நடவடிக்கைகளில் ஈடுபட அறிந்திருப்பார்கள்.<br><br>பல்வேறு பயன்பாட்டு மென்பொருள்களை (application software) செயற்படுத்திக் கோப்புகளை (Folder Files) பயன்படுத்த அறிந்திருப்பார்கள்.<br>(எ.டு): கோப்புகளை முறையாகத் திறத்தல், மூடுதல், செய்த வேலைகளைச் சேமித்தல், அச்சிடுதல் ஆகியவற்றைச் செய்ய அறிந்திருப்பார்கள். |

| தொடர்புச் சாதனங்கள் பயன்படுத்துதல் பற்றிய அறிவு பெறுதல்<br>**MEDIA LITERACY** | | |
|---|---|---|
| **தொடக்கநிலை 1 & 2** | **தொடக்கநிலை 3 & 4** | **தொடக்கநிலை 5 & 6** |
| | **திறன்:**<br>சிறு வாக்கியங்களைத் தட்டச்சு செய்ய அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் விசைப்பலகையின் அமைப்புமுறையைப் பயன்படுத்த நன்கு அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் தட்டச்சு செய்யும்போது விரல்களைச் சரியான நிலையில் வைத்துத் தட்டச்சு செய்ய அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் எழுத்து, சொல், சொற்றொடர் பிறகு சிறு வாக்கியங்கள் எனப் படிப்படியாகத் தட்டச்சு செய்ய அறிந்திருப்பார்கள். | **திறன்:**<br>சிறு பனுவல்களைத் தட்டச்சு செய்ய அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் விசைப்பலகையின் அமைப்புமுறையை பயன்படுத்த நன்கு அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் தட்டச்சு செய்யும்போது விரல்களைச் சரியான நிலையில் வைத்துத் தட்டச்சு செய்ய அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் எழுத்து, சொல், சொற்றொடர் பிறகு வாக்கியங்கள் எனப் படிப்படியாகத் தட்டச்சு செய்ய அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் பனுவலைத் தட்டச்சு செய்யும்போது பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறிகள், எண்கள் ஆகியவற்றைச் சேர்க்க அறிந்திருப்பார்கள். |
| | மாணவர்கள் சிறு வாக்கியங்களைத் தொகுக்கவும் சீரமைக்கவும் (edit & format) அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் பின்னிட விசை (backspace key), நீக்குதல் விசை (delete key) ஆகியவற்றின் பயன்பாட்டை அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் எழுத்துருக்களின் (fonts) அளவு, நிறம், வகை (size, colour and style of text) ஆகியவற்றை மாற்றியமைக்க அறிந்திருப்பார்கள். | மாணவர்கள் பனுவல்களைத் தொகுக்கவும் சீரமைக்கவும் (edit & format) அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் பின்னிட விசை (backspace key), நீக்குதல் விசை (delete key) ஆகியவற்றின் பயன்பாட்டை அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் எழுத்துருக்களின் (fonts) அளவு, நிறம், வகை (size, colour and style of text) ஆகியவற்றை மாற்றியமைக்க அறிந்திருப்பார்கள். |

| தொடர்புச் சாதனங்கள் பயன்படுத்துதல் பற்றிய அறிவு பெறுதல்<br>**MEDIA LITERACY** | | |
|---|---|---|
| **தொடக்கநிலை 1 & 2** | **தொடக்கநிலை 3 & 4** | **தொடக்கநிலை 5 & 6** |
| | | • மாணவர்கள் பொட்டுக்குறிகளை (bullets) பயன்படுத்தவும் பத்தி அமைக்கவும் அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் பத்திகளைத் தொகுத்தல், சீரமைத்தல் (edit & format) பக்கங்களுக்கு எண்கள் இடுதல், பக்க ஓரங்களை (margins) ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றைச் செயல்படுத்த அறிந்திருப்பார்கள். |
| | **திறன்:**<br>பனுவல்களுக்கிடையே படங்களைச் செருக (insert) அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் பனுவல்களையும் படங்களையும் செருக அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் படங்களின் நிறம் மற்றும் அளவு ஆகியவற்றை மாற்றி அமைக்க அறிந்திருப்பார்கள். | **திறன்:**<br>பனுவல்களுக்கிடையே படங்கள், வரைபடங்கள், ஒலி, ஒளிப் பகுதிகள் ஆகியவற்றைச் செருக அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் பத்திகளையும் படங்களையும் செருக அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் படங்களின் நிறம் மற்றும் அளவு ஆகியவற்றை மாற்றியமைக்க அறிந்திருப்பார்கள்.<br>• மாணவர்கள் பல ஊடகங்களைத் தங்கள் படைப்புகளில் சேர்த்துக்கொள்ள அறிந்திருப்பார்கள். |

| தயாரித்தல்<br>**PRODUCTION** | | |
|---|---|---|
| **தொடக்கநிலை 1 & 2** | **தொடக்கநிலை 3 & 4** | **தொடக்கநிலை 5 & 6** |
| **திறன்:**<br><br>• மாணவர்கள் மொழியையும் தகவல்களையும் துல்லியமாகவும் படைப்பாக்கத்துடனும் பயன்படுத்த அறிந்திருப்பார்கள்.<br><br>(எ.டு) சொல்லுக்கேற்ற படத்தை இணைத்தல் | **திறன்:**<br><br>• பனுவல்கள், படங்கள், வரைபடங்கள், ஒலிப் பகுதிகள் ஆகியவை உள்ளடங்கிய படைப்பை ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் தயாரிக்க அறிந்திருப்பார்கள்.<br><br>(எ.டு) MS PowerPoint பயன்படுத்திப் படைப்பை உருவாக்குதல்<br><br>• மின்னஞ்சல் அனுப்புதல், நிகழ்நிலையில் (online) வேலைகளை ஒப்படைத்தல்<br><br>(எ.டு) நிகழ்நிலைமூலம் (online) பயிற்சித்தாள்களை ஆசிரியரிடம் சேர்த்தல் | **திறன்:**<br><br>• பனுவல்கள், படங்கள், வரைபடங்கள், ஒலி, ஒளிப் பகுதிகள் அசைபடங்கள் (animation) ஆகியவை உள்ளடங்கிய பல்லூடக (multimedia) படைப்பைத் தயாரிக்க அறிந்திருப்பார்கள்.<br><br>• மின்னஞ்சல் (இணைப்புகள் இல்லாமல், இணைப்புகளுடன்) அனுப்ப அறிந்திருப்பார்கள்.<br><br>(எ.டு) நிகழ்நிலையில் (online) மற்றவர்களுடன் தொடர்புகொண்டு கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள அறிந்திருப்பார்கள். |

MINISTRY OF EDUCATION
SINGAPORE

ISBN:978-981-05-7978-4